REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மார்ச் 16 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 64 | Wednesday 16, March, 2022 | 20பக்கங்கள் | 30/-

## இன்று நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விசேட உரை



இன்று புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, ஜனாதிபதியால் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று இந்தியாவுக்கு விஜயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று இந்தியத் தலைநகர் புது டில்லிக்குப் பயணமானார்.

நிதியமைச்சருடன் நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகலவும் இந்தியாவுக்கு பயணமாகியுள்ளதுடன் நேற்று மதியம் அவர்கள் நாட்டிலிருந்து புறப்பட்டு சென்றதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவிடம் இருந்து இலங்கை பெற்றுக்கொள்ள உள்ள ஒரு பில்லியன் அமெரிக்கன் டொலர் கடன் உதவி தொடர்பான உடன்படிக்கை இந்த விஜயத்தின்போது கைச்சாத்திடப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையில் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக

06

**டீசல், மசகு எண்ணெய் இறக்குமதி;**

## ஐக்கிய அரபு இராச்சியத்துடன் நீண்டகால ஒப்பந்தம் செய்ய தீர்மானம்

டீசல் மற்றும் மசகு எண்ணெய் என்பவற்றின் இறக்குமதிக்கான நீண்டகால ஒப்பந்தத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் கொரல் எனர்ஜி டீஎம்சீசீ நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையான 8 மாதகாலத்துக்கான டீசல் (உயர்ந்தபட்ச சல்பர் 0.05) இறக்குமதி செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தத்தை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களிடம் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

**காணாமல்போனோர் குடும்பங்களுக்கு**

## மரண அல்லது காணக்கிடைக்கவில்லை சான்றிதழுடன் ஒரு இலட்சம் ரூபா!

காணாமல் போனவர்கள் தொடர்பான குடும்பங்களின் வாழ்வினை மீள கட்டியெழுப்புவதற்காக ஒரு இலட்சம் ரூபாவை, ஒரு முறை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதியமைச்சர் அலிசப்ரி, இந்த யோசனையை அமைச்சரவையில் முன்வைத்திருந்தார்.

எதிர்கால சந்ததியினரின் நலன்களை பாதுகாக்கவும், நல்லிணக்கத்தை பேணும் வகையிலும் தற்போது வகுக்கப்பட்டுள்ள

### அமைச்சரவை அனுமதி

கொள்கைகளுக்கமைய அந்த குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு 17ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் மூலம், காணாமல் போன நபர்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு இறப்புச் சான்றிதழ் அல்லது காணக்கிடைக்கவில்லை என்ற

06

**தொழில்நுட்ப உதவி, ஆலோசனை பெற**

# சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் பேச்சுவார்த்தை

*அமைச்சரவை கூட்டத்தில் உடன்பாடு*

**ஷம்ஸ் பாஹிம்**

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கும், ஆலோசனை மற்றும் ஆதரவைப் பெறுவதற்கும் அமைச்சரவை கூட்டத்தில் கொள்கை ரீதியான உடன்பாடு வழங்கப்பட்டதாக இணை அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அடுத்த மாதம் உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் அதன் படி சர்வதேச நாணய நிதிய ஆலோசனை பெறப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் 14 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவையும் நேற்று (15) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் சந்தித்து இலங்கையின் பொருளாதார நிலைமைதொடர்பான தமது நிலைப்பாட்டை தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்துக்கான எதிர்கால திட்டங்கள் மற்றும் அவற்றை அமுல்படுத்துவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவிய போது பதிலளித்த அமைச்சர், எந்தவொரு அரசாங்கமும் தனது ஆட்சிக் காலத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் பொருட்கள் மற்றும் தேவைகளுக்காக வரிசையில் நிற்பது குறித்து மகிழ்ச்சியடையவில்லை.

06

## IMF பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சிலர் நேற்று (15) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சாங்யோங் ரீ (Changyong Rhee), பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஏன்மெரீ கல்டே வூல்ஃப் (AnneMarie GuldeWolf) மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி டுபாகஸ் பெரிடானுஸெட்யாவான் (Tubagus Feridhanusetyawan) ஆகியோர் இதில் அடங்குவர்.

06

**எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டம்:**

## பல வீதிகளில் போக்குவரத்து நெரிசல் மக்கள் பெரும் அசௌகரியம்



(படம்: ஹிரந்த குணதிலக)

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய மக்கள் சக்தி நேற்று பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை கொழும்பில் மேற்கொண்டது.

இதனால் நேற்று கொழும்பு நகர சபை பகுதி உள்ளிட்ட பல்வேறு வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டது. இந்த எதிர்ப்புப் பேரணியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதனோடு இணைந்த பங்காளிக் கட்சிகளின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டதுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா ஆகியோர் பேரணிக்கு தலைமை தாங்கினர். எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும்

06

## 'வெள்ளை வான்' ஊடக சந்திப்புடன் தொடர்புள்ள சாட்சிகளுக்கு அழுத்தம்

### விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

ஜனாதிபதித் தேர்தலின் போது நடத்தப்பட்ட சர்ச்சைக்குரிய 'வெள்ளை வான்' ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சாட்சிகளுக்கு யார் அழுத்தம் கொடுத்தார்கள் என்பது தொடர்பில் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த நேற்று (15) உத்தரவிட்டார்.

'வெள்ளை வான்' ஊடகவியலாளர் சந்திப்பின் போது வழக்கின் பிரதான சாட்சிகள் இருவர் நீதிமன்றில் ஆஜராகவிடாமல் தடுக்கப்படுவதாக அவர்களின் சட்டத்தரணி தெரிவித்திருந்த விடயத்தை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.




வெள்ளை வான் ஊடக மாநாட்டில் மாறுவேடத்தில் வந்த சரத் குமார மற்றும் அதுல சஞ்சீவ மதநாயக்க ஆகியோர் தமக்கு இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவித்து நீதிமன்றில் ஆஜராகவில்லை .

வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பொய்யான தகவல்களை முன்வைத்தல், அதற்கு உறுதுணையாக இருந்தமை, ஜனாதிபதி தேர்தல் முடிவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் குற்றச் செயலில் ஈடுபட்டமை உட்பட 14 குற்றப்பத்திரிகைகள் இவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ராஜித சேனாரத்ன சார்பில் ஆஜரான மைத்திரி குணரத்ன, சட்டமா அதிபரால் இந்த வழக்கை தொடர முடியாது என முதற்கட்ட ஆட்சேபனை முன்வைத்திருந்தார்.

## கொவிட் தொற்று, மரண எண்ணிக்கை வீழ்ச்சி



நாட்டில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கையும் கொவிட் 19 தொற்றினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமானளவு குறைவடைந்துள்ளது.

80 சத வீதத்துக்கும் அதிகமானோருக்கு இரு கட்ட தடுப்பூசிகளும் வழங்கப்பட்டமையே இதற்கான காரணமாகும்

06

## ஜனாதிபதி– TNA பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த விசேட பேச்சுவார்த்தை ஒத்திப்போடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒத்திப்போடப்பட்டுள்ள பேச்சுவார்த்தை மீண்டும் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறுவதற்கான ஒழுங்குகள்

06

## ரயில் கட்டணங்களை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

*விரைவில் மறுசீரமைப்பு என்கிறார் அமைச்சர் திலும் அமுனுகம*

**ஷம்ஸ் பாஹிம்**



ரயில் கட்டணங்களை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.


அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து பஸ் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பஸ் சங்கங்களுடன் கலந்துரையாடி குறைந்தளவான வீதத்தில் பஸ் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதேபோன்று ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கும் ஆராயப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை. பஸ் கட்டணத்தை விடவும் மூன்றில் ஒரு பங்கு குறைவாகவே ரயில் கட்டணமாக இருக்கின்றது. இந்நிலையில் தற்போது டீசல் விலை 50 ரூபாவினால் அதிகரித்துள்ளதையடுத்து ரயில்வே திணைக்களத்தினால் டீசல் செலவை ஈடு செய்ய முடியாத நிலைமையே உள்ளது.

06

## முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் கட்டாயம்



**வர்த்தமானி அறிவிப்பு விரைவில் நடைமுறை**

**ஷம்ஸ் பாஹிம்**

குறைந்தபட்சம் ஒரு மாகாணத்திலாவது அனைத்து முச்சக்கர வண்டிகளையும் மீற்றர் ஆட்டோக்களாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்த எதிர்பார்ப்பதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பாடசாலை வான் மற்றும் கொள்கலன் வாகனங்களை எவ்வாறு மேற்பார்வை செய்வது என்பது குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அனைத்து முச்சக்கர வண்டிகளையும் மீற்றர் ஆட்டோக்களாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள போதிலும், செலவு காரணமாக முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சற்று நிவாரணம் வழங்குவதற்காக மீற்றர் பொருத்துவது குறுகிய காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலை மீள செயற்படுத்தவுள்ளதாகவும் வரவு செலவுத் திட்டத்தில் முச்சக்கர வண்டிகளுக்காக சுமார் 800 மில்லியன் ரூபாவை நிதியமைச்சர் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பஸ் கட்டணம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில்,

06

## உக்ரைன் போரால் உலகளவில் ஏழை நாடுகளுக்கு பெரும் பாதிப்பு

**கோதுமை கிடைக்காமல் அவதிப்பட நேரிடும்**

**ஐ.நா. சபை எச்சரிக்கை**

உக்ரைன் – ரஷ்யா போர் காரணமாக சர்வதேச அளவில் ஏழை மக்களுக்கு பாதிப்பு ஏற்படத் தொடங்கி இருப்பதாக ஐ.நா. சபை எச்சரித்துள்ளது.

உலகின் சூரிய காந்தி எண்ணெய் தேவையில் 50 சதவீதத்துக்கும் மேல் உக்ரைன் நாடுதான் தருகிறது.

அதுபோல உலகின் கோதுமை தேவையில் 30 சதவீதத்தை உக்ரைன் நாடு பூர்த்தி செய்கிறது.

போர் காரணமாக கோதுமை மற்றும் சூரிய காந்தி எண்ணெய் வழங்குவதில் இடையூறு ஏற்பட்டுள்ளது. இதனால் வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள ஏழை மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாவார்கள்.

ஆப்பிரிக்க நாடுகளில் 45 நாடுகளின் ஏழைகள் கோதுமை கிடைக்காமல் அவதிப்பட நேரிடமென்று ஐ.நா. சபை கூறியுள்ளது.

## டொலரின் பெறுமதி 275 ரூபாவானது



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 275 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதேவேளை ஸ்டெர்லிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 360 ரூபாய் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# தினகரன் 90ஆவது வருட நிறைவு விழா




படங்கள்: சாலிய ரூபசிங்க, சமந்த வீரசிறி, சுதத் மலவீர

மேலும் படங்கள் 15 ஆம் பக்கம்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 மார்ச் 16 புதன்கிழமை



**தொழுகை நேரம்**
சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் பங்குனி 02
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**
மேஷம் - முயற்சி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - சுகம்
கன்னி - செலவு
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - கோபம்
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# யாழ். மாணவன் கஜலக்‌ஷினுக்கு அமைச்சர் டளஸ் வாழ்த்து

**ஷம்ஸ் பாஹிம்**

புலமைப்பரிசில் பரீட்சையில் இவ்வருடம் அதிகூடிய சித்திகளைப் பெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்செல்வம் கஜலக்‌ஷன் உட்பட சகல மாணவர்களுக்கும் அமைச்சரவை பேச்சாளர் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

சித்தியடைந்த மாணவர்கள், சித்தியடையாத மாணவர்கள் என ஊடகங்கள் பாகுபாடு காட்டக் கூடாது என ஊடகத்துறை அமைச்சர்

06

# துபாயில் நடைபெற்ற உலக பொலிஸ் மாநாட்டில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வீரசேகர




பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் கலாநிதி சரத் வீரசேகர, துபாய் இளவரசர் ஷேக் ஹம்தான் பின் மொஹமட் பின் ரஷீத் அல் மக்தூமை நேற்று முன்தினம் (14) உலக பொலிஸ் உச்சிமாநாட்டில் சந்தித்தார்.

அமைச்சர் சரத் வீரசேகர INTERPOL தலைவர் Dr. Ahamed Naser Al Raisi, துபாய் பொலிஸ் தலைமை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் அப்துல்லா அல் மர்ரி மற்றும் துபாயில் உலக பொலிஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பொலிஸ் தலைவர்களையும் சந்தித்தார்.

குற்றங்கள், பயங்கரவாதம் மற்றும் பிற அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கான சட்ட அமுலாக்க ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை குறித்து பொலிஸ்துறைத் தலைவர்களின் வருடாந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. உலக பொலிஸ் உச்சிமாநாடு மன்றம் என்பது

06

### பசுமை விவசாயத்தில்

# நம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு முடிவுகளை காண்பிப்போம்

## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு



பசுமை விவசாயத்தில் நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு, வெற்றிகரமான முடிவுகளை அடைய முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறு போகத்துக்கான சேதனப் பசளையை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (15) முற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

பெரும் போகத்தில் சேதனப் பசளையை சரியாகப் பயன்படுத்திய விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெற்றுள்ளனர். அதில் ஈடுபடாத விவசாயிகளுக்கும் முறையாக தெளிவுபடுத்தி ஏற்பட்ட குறைபாடுகளைத் தவிர்ப்பதன் மூலம் பசுமை விவசாயத்துக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தில் வெற்றி பெறலாம் என்று மாவட்டச் செயலாளர்கள் இதன்போது தெரிவித்தனர். பெரும் போகத்தில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் 48 சேதனப் பசளை உற்பத்தியாளர்களைத்

06

# தவக்கால சிந்தனை



## வேதனையிலும் பொறுமை

தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞர்களிடமும் தாம் ஒப்படைக்கப்படவிருப்பதைப் பற்றியும் தாம் எதிர்கொள்ளப்போகும் கொடிய மரணம் மற்றும் உயிர்ப்பைப் பற்றியும் இயேசு தன்னுடைய சீடர்களிடம் மிகவும் வருத்தத்தோடும் தெளிவோடும் உரையாடிக்கொண்டிருக்கிறார்.

அந்த வேளையில் இயேசுவினுடைய சீடர்கள் இருவர் தங்களுடைய தாயோடு அங்கு வருகிறார்கள். அந்த தாய் இயேசுவைப் பார்த்து 'நீ ஆட்சி புரியும் போது என் மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவர் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவர் இடப்புறமும் அமரச் செய்யும் என்று வேண்டினார்.

இயேசு தன்னுடைய வேதனைகளின் உச்சத்தை நண்பர்களோடு பகிர்ந்து கொண்ட அதே வேளை அந்த சீடர்கள் தங்களுடைய சுயநலத்தின் உச்சத்தை இயேசுவின் மீது திணிக்க முயற்சி செய்கிறார்கள்.

இரண்டு மாறுபட்ட சிந்தனைகள் ஒரே இடத்தில் ஒரே கோட்டில் பயணிக்க முற்படுகிறது. இயேசுவின் இடத்தில் நாம் இருந்திருந்தால் நிச்சயமாக அந்த சீடர்கள் மீது கோபத்தை அள்ளித் தெளித்திருப்போம். சாபத்தை அவர்களுக்கு வழங்கி இருப்போம்.

ஆனால் இயேசு தன்னுடைய உணர்வுகளை, வலியை புரிந்து கொள்ளாமல் இவர்கள் இப்படிச்செய்கிறார்களே என்று கோபப்படாமல் பொறுமையோடு அந்த தாய்க்கு விளக்கமளிக்க முயற்சிக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் அதிக துன்பங்களை எதிர்கொள்வதற்கு காரணம் நாம் பொறுமையோடு முடிவெடுப்பதில்லை. குறிப்பாக நாம் துன்பத்தில் வேதனையில் இருக்கும் போது பிறர் நம்மை புரிந்து கொள்ளாத போது நாம் பொறுமையை இழந்து விடுகிறோம். அவசரப்பட்டு பல வார்த்தைகளை உதிர்க்கின்றோம். பல தவறான முடிவுகளை எடுக்கிறோம். இது நம்முடைய மகிழ்ச்சியை முற்றிலுமாக அழித்து விடுகின்றது. இயேசுவைப்போல நாமும் புரிந்துகொள்ளப்படாத சூழலிலும் பொறுமையோடு சூழ்நிலையை கையாளும் போது நாம் நம்முடைய அமைதியையும் மதிப்பையும் இழக்காமல் வாழ முடியும்.

அருட்தந்தை அருண் ரெக்ஸ்...

# கலன்களுக்கு எரிபொருள் நிரப்ப தடை

டீசலை கலன்களில் நிரப்புவதை நிறுத்துமாறு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்தியங்களுக்கான நிர்வாக முகாமையாளர் மஹேஷ் அலவத்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த சட்டத்தை மீறும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் அவ்வாறு டீசல் விநியோகிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மின் கட்டண பட்டியலின் அளவிலும் மாற்றம்

இலங்கை மின்சார சபை (CEB) தனது வாடிக்கையாளர்களுக்கு வழமையாக வழங்கிவரும் மின் கட்டண பட்டியலுக்கு பதிலாக, சிறிய மின் கட்டண பட்டியலை வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. சில பகுதிகளில் மின்சார சபையினால் சிறியளவான கட்டணம் மாத்திரம் பொறிக்கப்பட்ட மின் கட்டண பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

பழைய கட்டண பட்டியல் புத்தகங்கள் தீர்ந்துவிட்டதாகவும், புதிய கட்டண பட்டியலிடும் புத்தகங்கள் இன்னும் அச்சிட்டு வரவில்லை என்றும் மின்மானி வாசிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். நாட்டில் கடதாசி இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி இல்லாததால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கு இனி மின்சாரத் துண்டிப்பு கிடையாது

## அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முதலீட்டு ஊக்குவிப்பு வலயப் பகுதிகளில் இனிமேல் மின் துண்டிப்பு முன்னெடுக்கப்பட மாட்டாது என மின் சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுதல் முதலீட்டு ஊக்குவிப்பு வலயப் பிரதேசங்களுக்கு மின்சாரத்தை தடையின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலய பிரதேசங்களில் மின் துண்டிப்பை மேற்கொள்வதால் ஏற்றுமதி உற்பத்திகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதை கவனத்திற் கொண்டே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள 14 முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கும் நேற்று முதல் தடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

06

### நாட்டில் நெருக்கடியான சூழ்நிலை

# நடைமுறைசாத்தியமான தீர்வுகளை காண அனைவரும் முன்வர வேண்டும்

## அமைச்சர் டளஸ் அழகப்பெரும் வேண்டுகோள்

**ஷம்ஸ் பாஹிம்**

முழு நாடும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் தற்போதைய நிலையில், அனைவரும் ஒன்றிணைந்து இந்த நெருக்கடிக்கு நடைமுறைசாத்தியமான தீர்வுகளை காண உணர்வுபூர்வமாக முன்வர வேண்டுமென ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும வேண்டுகோள் விடுத்தார்.

உண்மையைச் சொல்வதற்கும் நடந்திருப்பதை ஏற்றுக்கொள்வதற்கும் எந்தத் தயக்கமும் கிடையாதென்றும், இது இரகசியமான விடயமல்ல என்றும் அவர் கூறினார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் தானும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் கலந்துரையாடி வருவதாகவும், அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் மாத்திரம் அல்ல, எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் இந்த விடயத்தை தமது பிரச்சினையாக கருத வேண்டுமெனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு அதிக பொறுப்பு இருப்பதாகவும், மக்கள் துன்பப்படுகையில் தான் மிகவும்

06

# மதுபான விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மதுபான வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபான வகைகள் மற்றும் பியர் வகைகளின் விலைகள் 15 வீதத்திலிருந்து 40 வீதம் வரை விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக

கலால் திணைக்கள ஊடகப் பேச்சாளரும் ஆணையாளருமான கபில குமாரசிங்க தெரிவித்தார். அது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்:

06

# நாட்டில் எந்தவித மருந்து தட்டுப்பாடும் கிடையாது

## சில தரப்பினர் அரசியல் செய்ய முயற்சி: -இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் எந்தவித மருந்து தட்டுப்பாடும் கிடையாது என்றும் போதியளவு மருந்துகள் கைவசம் உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கத்துடன் நாட்டில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக சில தரப்பினர் ஊடகங்கள் மூலம் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரத்மலானை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

நாட்டின் மருந்து தேவையை கவனத்திற் கொள்ளும் போது கையிருப்பில் உள்ள மருந்துகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் போதியளவு காணப்படும் நிலையில் தற்போது நாட்டில் மருந்து

06

### காணி அபிவிருத்திக் கட்டளை சட்டம்:

# இரண்டு ஒழுங்கு விதிகளுக்கு அமைச்சுசார் ஆலோசனை குழு இணக்கம்



காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் தொடர்பான இரண்டு ஒழுங்கு விதிகளை அனுமதிக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அண்மையில் நடைபெற்ற (11) காணி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தலைமையில் நடைபெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இதற்கமைய காணி

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 183.25 | 192.37 |
| கனடியன் டொலர் | 195.26 | 204.12 |
| யூரோ | 278.29 | 288.81 |
| ஜப்பான் யென் | 2.1570 | 2.2543 |
| சிங்கப்பூர் டொலர் | 185.58 | 192.47 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 270.59 | 281.79 |
| அமெரிக்க டொலர் | 249.96 | 259.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 608.26 | கட்டார் ரியால் | 62.81 |
| குவைத் டினார் | 755.13 | சவூதி ரியால் | 61.12 |
| ஓமான் ரியால் | 595.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.43 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 02ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 12

## குறள் தரும் சிந்தனை



அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்

மறதியில்லாமலும், அக்கறையுடனும் செயல்பட்டால், முடியாதது என்று எதுவுமே இல்லை.

# மக்களை துன்பத்துக்கு உள்ளாக்கிய எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டம்!

கொவிட் 19 தொற்றின் விளைவாக நாட்டில் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார சவால் பலவிதமான நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. அவற்றில் அந்நிய செலாவணி பற்றாக்குறை, அதன் விளைவான எரிபொருள் தட்டுப்பாடு, அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், பொருட்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்றபடி ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டதாக நாட்டில் தோற்றம் பெற்றுள்ள அனைத்துப் பிரச்சினைகளும் அமைந்திருக்கின்றன.

இப்பிரச்சினைகள் நாட்டு மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான அனைத்து விதமான நடவடிக்கைகளையும் வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. எப்போதும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வரும் இவ்வரசாங்கம், நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பேச்சுவார்த்தைகளையும் சந்திப்புகளையும் முன்னெத்துள்ளது.

அதேநேரம் கொவிட் 19 தொற்றின் விளைவாக நாடு பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. அதன் விளைவாகப் பல நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதை வெளிப்படையாகவே கூறியுள்ள அரசாங்கம், இந்நெருக்கடிகள் மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்ப்பதற்கான வேலைத்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவும் தவறவில்லை.

தற்போதைய சூழலில் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்காக கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் ஆதங்கமும் ஆகும். அவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றுகின்ற பாரிய சேவையாக அமையும். அவற்றின் ஊடாக இந்த நெருக்கடியில் இருந்து மக்களுக்கு நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

இருந்த போதிலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அற்ப அரசியல் இலாபம் தேடிக் கொள்ளும் முயற்சியில் எதிர்க்கட்சியினர் ஈடுபட்டுள்ளனர். தற்போதைய சூழலில் இவ்வாறான நடவடிக்கை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாததாகும். அந்நடவடிக்கையை நாட்டு மக்களும் அங்கீகரிக்கப் போவதுமில்லை. பொறுப்பு வாய்ந்த எந்த அரசியல் கட்சியும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் ஈடுபடாது.

இந்நாட்டின் தற்போதைய எதிர்க்கட்சியினர் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார சவாலின் விளைவான நெருக்கடிகளுக்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்து நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் நிமித்தம் நாட்டில் பல பிரதேசங்களில் இருந்தும் தமது ஆதரவாளர்கள் கொழும்புக்கு வருகை தருவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனாலும் இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் நடத்தப்படும் இடத்தை அவர்கள் முன்கூட்டியே அறிவிக்கத் தவறினர். இதன் விளைவாக கொழும்பின் பல வீதிகளிலும் வாகன நெரிசல்கள் ஏற்பட்டன. பயணிகள் மணித்தியாலயக் கணக்கில் வீதியில் காத்திருக்கும் நிலைக்கு உள்ளாகினர்.

அத்தோடு பலவிதமான அசௌகரியங்களுக்கும் அவர்கள் உள்ளானார்கள். கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள பொருளாதார சவாலின் விளைவான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள மக்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டத்தை எதிர்க்கட்சியினர் ஒழுங்கு செய்திருந்தனர். அதாவது 'மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாகவே' அவர்களது நேற்றைய ஆர்ப்பாட்டம் அமைந்திருந்தது. இவ்வாறான ஆர்ப்பாட்டத்தின் ஊடாக கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுக்கு கிடைத்து விடப் போதில்லை. இதனை எதிர்க்கட்சியினர் அறியாதவர்களும் அல்லர். இருந்தும் கூட இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி மக்களையே அசௌகரியங்களுக்கு உள்ளாக்கினர்.

மக்களின் நலன்கள் தொடர்பில் பொறுப்புடன் செயற்படும் எதிர்க்கட்சி என்றிருந்தால் இவ்வாறு மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வகையில் அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருக்க மாட்டாது. இந்த பொருளாதார சவாலின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிகளில் இருந்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையே அவர்கள் முன்னெடுத்திருப்பர். அதுவே இப்போதைய தேவையாகும். இதன் நிமித்தம் அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆகவே தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் எல்லாத் தரப்பினரும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். அதுவே இன்றைய தேவை. அதைவிடுத்து தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அற்ப அரசியல் இலாபம் தேடுவதற்கான காலசூழல் இதுவல்ல.

editor.tkn@lakehouse.lk

# பல்கலைக்கழக மாணவர்கள் ஊடாக நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை மலர செய்யும் திட்டம்

இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்னும் தொனிப்பொருளில் தலைமைத்துவ மேம்பாட்டு பயிற்சி முகாம் எம்பிலிப்பிட்டியவில் உள்ள தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய நிலையத்தில் 05 நாட்கள் நடைபெற்றது.

இது இந்நாட்டின் பல்கலைக்கழக முறைமையைப் பொறுத்த வரை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வவுனியா பல்கலைக்கழகத்தின் தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களில் இருந்து 250 பேர் இதன் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டு துறை சார்ந்த வளவாளர்கள் மற்றும் நிபுணர்களால் பயிற்றுவிக்கப்பட்டனர்.



இதன் சம்பிரதாயபூர்வ ஆரம்ப விழாவில் இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜயகோன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சமூக நல்லிணக்க விடயங்களுக்கான தலைவர் பேராசிரியர் பிரேமகுமார டி சில்வா, தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மையத்தின் பணிப்பாளர் ஏ. பி. எம். அஷ்ரப் உள்ளிட்ட பேராளர்கள் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி உரையாற்றினார்கள். வவுனியா பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி ரி. மங்களேஸ்வரன் இணையவழி தொழினுட்பம் மூலமாக சிறப்புரை ஆற்றினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைகுழுவின் சமூக நல்லிணக்க விடயங்களுக்கான நிலையியல் குழு உறுப்பினரும், வவுனியா பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள சமூக நல்லிணக்க மையத்தின் கல்வி, ஆராய்ச்சி, மற்றும் பயிற்சி விடயங்களுக்கான பொறுப்பாளரும், ஜனாதிபதி செயலணி உறுப்பினருமான பேராசிரியர் நந்தன சாந்தி விஜேசிங்க உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கூட்டுப் பங்களிப்பில் இடம்பெறுகின்ற இப்பயிற்சி முகாம் தலைமைத்துவ மேம்பாட்டுக்கான பயிற்சி நிலையத்தை பொறுத்த வரையிலும் சரி, இந்நாட்டு பல்கலைக்கழக முறைமையை பொறுத்த வரையிலும் சரி முற்றிலும் புதிய விடயம் ஆகும். மூன்று தசாப்த கால யுத்தத்துக்கு பின்னர் கூட இந்நாட்டில் முழுமையான சமூக நல்லிணக்கம் இன்னமும் மலர்ந்து விடவில்லை. எனவே சமூக நல்லிணக்கத்தை நாளைய தலைவர்களான பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை இந்நாட்டில் மலர செய்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

இந்நாட்டின் பல்கலைக்கழக முறைமையை பொறுத்த வரை வவுனியா பல்கலைக்கழகத்தில்தான் முதலாவது சமூக நல்லிணக்க மையம் அமைக்கப்பட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த மாதம் 11 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



## வவுனியா பல்கலைக்கழக மாணவர்களுக்கு வரப்பிரசாதம்

எதிர்காலத்தில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் சமூக நல்லிணக்க மையம் அமைக்கப்பட உள்ளது. இவற்றின் மூலம் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி போன்ற விடயதானங்கள் கையாளப்படும். குறிப்பாக பல்கலைக்கழக அனுமதி கிடைக்க பெறாத மாணவர்களுக்காக பிரத்தியேக கற்கைநெறிகள் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன. இக்கற்கை நெறிகள் மூலமாக இளையோர் மத்தியில் கல்வி அறிவை விருத்தி செய்ய முடியும்.



தலைமைத்துவ மேம்பாட்டு பயிற்சி முகாமில் பங்கெடுத்து கொண்டிருக்கின்ற வவுனியா பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழிகாட்டல், அறிவூட்டல், விழிப்பூட்டல், ஊக்குவித்தல் ஆகியனவும் போதித்து கொடுக்கப்படுகின்றன. சவால்கள் நிறைந்த உலகத்தை வெற்றி கொள்வதற்கு இப்பயிற்சி முகாம் மாணவர்களுக்கு பேருதவியாக அமையும். அதே போல இனம், மதம், மொழி, சாதி போன்ற தடைகளை தகர்த்து முன்னோக்கி பயணிப்பதற்கும் இப்பயிற்சி முகாம் உதவும்.

இலங்கையின் இளையோர்களை உலக ஆளுமைகளாக மலர செய்வதே எமது இலக்கு ஆகும். மிலேனியம் சவால்களை வெற்றி கொள்கின்ற வகைகளில் இந்நாட்டு பல்கலைக்கழகங்களின் சமூக நல்லிணக்க மையங்கள் மூலமாக இவர்கள் தயார் செய்யப்படுவார்கள். இதற்காக பல கற்கை நெறிகள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

குறிப்பாக சமாதானம் மற்றும் அபிவிருத்தி கற்கை நெறிகள் டிப்ளோமா/ கலைமாணி/ முதுமாணி மட்டங்களில் நடத்தப்பட உள்ளன. அதே போல அரசியல், ஊடக துறைகளில் உள்ள பெண்களுக்கு சான்றிதழ் கற்கைநெறிகள் நடத்தப்பட உள்ளன.

எமது பல்கலைக்கழக முறைமையில் புரட்சிகரமான இரு மாற்றங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்படுத்தி உள்ளார். தகவல் மற்றும் தொடர்பாடல்கள் பிரிவை கலைத்துறை மாணவர்களுக்கு கணனி கூடங்கள், ஆளணி முகாமைகள், இணைய வசதிகள் ஆகியவற்றை நிறுவி கொடுத்துள்ளார்.

மற்றையது பல்கலைக்கழகங்களில் சமூக நல்லிணக்க மையங்களை நிறுவுவதற்கு ஏதுவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் சமூக நல்லிணக்க விடயங்களுக்கான நிலையியல் குழுவை உருவாக்கி தந்துள்ளார்.

ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ள இரு புரட்சிகர மாற்றங்களும் 2050 ஆம் ஆண்டில் ஆசிய பிராந்தியத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுமலர்ச்சிக்கான ஆளுமையாக, தலைமையாக இலங்கையை மலர செய்வதில் உள்ள சவால்களை முறியடிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளே ஆகும்."

# மீண்டும் சிறை செல்லும் ஆபத்தில் சிக்கிய சசிகலா!

அ.தி.மு.கவில் எப்படியாவது மீண்டும் இணைந்துவிட வேண்டும் என்பதில் சசிகலா தீவிரமாக இருக்கிறார். இதற்காக அவர் பல்வேறு முயற்சிகளை எடுத்து வரும் நிலையில்தான், அவரின் காலை பாம்பு ஒன்று சுற்றிக் கொண்டு இருப்பதாக அரசியல் வட்டாரத்தில் தகவல்கள் அடிபடுகின்றன.

சசிகலா கடந்த வாரம்தான் திருச்செந்தூர் சென்று யாகம் வளர்த்தார். அங்கு ஓ. ராஜாவை சந்தித்ததோடு, தென்மாவட்ட அ.தி.மு.க நிர்வாகிகள் சிலருடன் அமைதிச் சந்திப்பும் நடத்தினார். ஜாதி ரீதியாகவும், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தோல்வி காரணமாகவும் அ.தி.மு.க இரட்டை தலைமை மீது தென்மண்டல நிர்வாகிகள் கோபமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.



இதையடுத்தே தென்மண்டல நிர்வாகிகளை தன் பக்கம் இழுக்கும் வகையில் சசிகலா இந்தப் பயணத்தை மேற்கொண்டார். இந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் சேலம் உள்ளிட்ட கொங்கு மாவட்டங்களிலும் அ.தி.மு.க படுதோல்வியைச் சந்தித்தது. இதனால் கொங்கு மண்டலத்திலும் நிர்வாகிகள் ஆதரவை பெறும் திட்டத்தில் சசிகலா இருக்கிறார்.

சசிகலா தனது கணவர் எம்.நடராஜனின் நினைவு நாளை முன்னிட்டு தஞ்சாவூருக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி செல்கிறார். அவர் அ.தி.மு.க நிர்வாகிகள் மற்றும் டெல்டா மாவட்ட தலைகளை சந்திக்க உள்ளார். அங்கிருந்து அப்படியே எடப்பாடி பழனிச்சாமியின் கோட்டையான சேலத்திற்கு செல்கிறார் சசிகலா. சேலத்தில் தனக்கு ஆதரவு திரட்டும் திட்டத்தில் அவர் இருக்கிறார். சேலத்திலேயே அ.தி.மு.க நிர்வாகிகளை தன் பக்கம் இழுத்து எடப்பாடிக்கு அதிர்ச்சி தருவதுதான் சசிகலாவின் திட்டம்.

ஆனால் சசிகலாவை சமாளிக்க தனக்குத் தெரியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார் எடப்பாடி. சசிகலாவின் சேலம் பயணத்தை எடப்பாடியிடம் சொல்லியிருக்கிறார்கள். அதனைக் கேட்டு, "சசிகலாவை முதலில் சென்னையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் போடச் சொல்லுங்களேன் பார்க்கலாம்" என்று கூறி இருக்கிறாராம்.

"அவர் வலுவாக இருப்பதாக சொல்லப்படும் டெல்டாவிலோ, தென் மண்டலத்திலோ கூட்டம் போடட்டும். அதன் பின்னர் எனது ஏரியாவில் கூட்டம் நடத்தட்டும்" என்று கூறியிருக்கிறார். ஆனால் அதே சமயம் சசிகலாவிற்கு எதிராக கவனமாக சில திட்டங்களையும் எடப்பாடி தீட்டி வருகிறாராம். "சேலத்தில் சசிகலா வருகின்ற போது கட்சி நிர்வாகிகள் யாரும் அந்தப் பக்கம் தலைவைத்துக் கூட படுக்கக் கூடாது. யாரேனும் கலந்து கொள்கிறார்களா என இப்போதிலிருந்து கண்காணியுங்கள்" என்று உத்தரவிட்டு இருக்கிறாராம். இது மட்டுமல்லாமல், பெங்களூர் சிறையில் சொகுசு வசதிகளுக்காக 2 கோடி ரூபா லஞ்சம் கொடுத்த வழக்கு தீவிரமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதில் நிச்சயம் அவருக்கு சிறைத் தண்டனை கிடைக்கும். குறைந்த பட்சம் 6 மாதம் முதல் அதிகபட்சம் 3 வருடங்கள் வரை சிறைத் தண்டனை உறுதி என்கிறார்கள்.

"ஒருவேளை சசிகலா மீண்டும் சிறைக்குப் போனால் மீண்டும் என்னிடம்தான் நீங்கள் வர வேண்டும். அவரை நம்பி செல்வது ஆபத்தானது என்று எச்சரிக்கை செய்து வருகிறாராம். சேலத்தில் கொடி நாட்ட சசிகலா நினைக்கும் போது, அவரின் தென்மண்டல அஸ்திவாரத்தை எடப்பாடி அசைத்துக் கொண்டு இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# மருதமுனை ஜெஸீல் தயாரிப்பில் விரைவில் வெளிவரும் இறுவட்டு



இந்திய சினிமாப் பாடலுக்கு நிகராக மருதமுனையில் இருந்து புது மெருகுடன் மிக விரைவில் வெளிவரவுள்ளது மருதமுனை ஜெஸீலின் கவிவரிகள் மற்றும் இசையமைப்பில் என் நிலவே, என் நிலவே பாடல் அடங்கிய இறுவட்டு. எமது மண்ணின் வாசம் மாறாது நமக்கே உரிய பரிமாணத்துடன் 'என் நிலவே' எனும் பாடல் இசை தொகுப்பு மிக விரைவில் வெளியிடப்படவிருக்கிறது.

மருதமுனையில் இருந்து தனது முதலாவது படைப்பை வெளியிடவுள்ளார் மருதமுனை ஜெஸீல்.

மருதமுனை ஜெஸீல் கலை இலக்கிய மற்றும் இசைத் துறையில் தடம் பதித்துள்ளார். இவரது முதலாவது கன்னி முயற்சியானது இந்திய தமிழ் சினிமாவுக்கு நிகராக கவிதை,இசை,காட்சி ஒளிப்பதிவு மற்றும் ஒலிப்பதிவில் சிறப்பாக அமைந்துள்ளது. கு

மருதமுனை ஜெஸீல் 1980ஆம் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி மருதமுனையைச் சேர்ந்த சம்சுத்தீன் அப்துல் வாஹிட் மற்றும் ஆதம்லெவ்வை செய்னுல் அரப் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் 2013ஆம் ஆண்டு முகாமைத்து உதவியாளராக நியமனம் பெற்று அக்கரைப்பற்று அஸ்சிறாஜ் வித்தியாலயத்தில் கடமையேற்றார். தற்பொழுது மரதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் கடமையாற்றி வருகின்றார். இந்த நிலையில் தனது கல்வியை மேம்படுத்தும் வகையில் பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து கலைமாணி பட்டத்தைப் பொற்றுள்ளார்.

கலை, இலக்கிய, ஆர்வம் காரணமாக தான் எழுதிய பாடல் ஒன்றுக்கு தானே மெட்டமைத்து இசை வடிவம் கொடுத்துள்ளார். அந்தப்பாடலுக்கு காட்சி வடிவம் கொடுத்து சிறப்பாக காட்சியமைத்தள்ளார். இப்பாடல்தான் என் நிலவே என்ற தலைப்பில் இறுவட்டாக வெளிவரவுள்ளது.

பாடலை அதே தலைப்பில் மிக விரைவில் வெளியிடவுள்ளார்.

பி.எம்.எம்.ஏ.காதர்...
(மருதமுனை தினகரன் நிருபர்)

# ரஷ்யாவைப் பலவீனப்படுத்த மேற்குலகம் விரித்துள்ள சதிவலையின் களமா உக்ரைன்?

ரஷ்யா உலகின் பலம் மிக்க அணுவாயுத வல்லரசு. இந்நாடு கடந்த மாதம் 24 ஆம் திகதி உக்ரைன் மீது பெரும் எடுப்பில் போரை ஆரம்பித்தது. இப்போர் ஆரம்பமாகி மூன்று வாரங்களாகியுள்ள போதிலும், யுத்தம் நீடித்த வண்ணமே உள்ளது. இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில், யுத்தப் பேரழிவுகளுக்கு உக்ரைன் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.



அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவின் சார்பு நிலையை உக்ரைன் எடுத்த தன் விளைவாக ரஷ்யாவின் படையெடுப்புக்கு உள்ளாகியுள்ளது. இப்படையெடுப்புக்கு எதிராக உக்ரைனுக்கு உதவுமாறு அந்நாட்டு ஜனாதிபதி வௌடிமிர் வெலன்சி கோரியும் உதவ மறுத்த இந்நாடுகள் யுத்தத்தை நிறுத்தி சமாதான வழிக்கு ரஷ்யாவை கொண்டு வருவதற்கான நேரடி முயற்சிகளை முன்னெடுப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் ரஷ்யாவை கோபம் கொள்ளச் செய்து, இப்போர் நீடிப்பதற்கான நடவடிக்கைகளையே அவை முன்னெடுத்து வருகின்றன.

அதாவது உக்ரைன் மீதான போரை ஆரம்பித்ததும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜி 7 நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்தன. ரஷ்ய விமானங்கள் தமது வான் பரப்பில் பறக்கவும் இந்நாடுகள் தடை விதிக்கத் தவறவில்லை. அத்தோடு ரஷ்யாவின் சில வங்கிகளது செயற்பாடுகளுக்கும் தடை விதித்ததோடு, ஸ்விப்ட் நிதிப் பரிவர்த்தனையிலிருந்தும் அந்நாட்டை நீக்கியுள்ளன. இதன் விளைவாக இந்த யுத்தம் ஆரம்பமானது முதலான சில நாட்களுக்குள் ரஷ்யாவின் ரூபிள் நாணயத்தின் பெறுமதி 30 வீதம் வீழ்ச்சியடைந்தது.

இதேவேளை, ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்துவதாக முதலில் கனடா அறிவிக்க, பிரித்தானியாவும் ரஷ்யாவின் மசகு எண்ணெய் இறக்குமதியை நிறுத்தியது. அதனைத் தொடர்ந்து ரஷயாவின் மசகு எண்ணெய், எரிவாயு, நிலக்கரி உள்ளிட்டவை மாத்திரமல்லாமல் கடலுணவு, வைரம் என்பவற்றின் இறக்குமதியையும் தடை செய்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. உக்ரைன் மீதான போருக்கு அங்கீகாரம் அளித்த 386 ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரித்தானியா தடை விதித்தித்திருக்கின்றது.

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பரிஸிலுள்ள கிரேவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த ரஷ்ய ஜனாதிபதி விளடிமிர் புட்டினின் மெழுகுச் சிலையை அந்நாட்டு அரசாங்கம் அகற்றியுள்ளது. இச்சிலை 2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

பதிலுக்கு ரஷ்யா தமது மசகு எண்ணெய் இறக்குமதி தடை செய்யப்படுமாயின் ஜேர்மனிக்கான எரிவாயு விநியோகக் குழாயை மூடிவிடப் போவதாக எச்சரித்துள்ளதோடு ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், சுவிட்சர்லாந்து, அல்பேனியா, தாய்வான், சிங்கப்பூர், நோர்வே உள்ளிட்ட 17 நாடுகளை தமது நட்புநாடுகளின் பட்டியலில் இருந்தும் நீக்கியுள்ளது.

அத்தோடு சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் அமெரிக்காவுடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொள்வதாக அறிவித்துள்ள ரஷ்யா, அமெரிக்காவுக்கு ரொக்கட் என்ஜின் வழங்குவதையும் நிறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில் ரஷ்யாவின் விண்வெளி அமைப்பான ரோஸ்கோஸ்மோஸ், "எமக்கு எதிரான பொருளாதார தடையின் விளைவாக 500 தொன் நிறை கொண்ட சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு சேவை செய்யும் விண்கலங்களின் செயற்பாடுகள் சீர்குலையும். அதன் விளைவாக விண்வெளி நிலையத்தின் சுற்றுப்பாதையை ஒழுங்குபடுத்த உதவும் ரஷ்யப் பிரிவு பாதிக்கப்படும். அதன் காரணத்தினால் இந்த ஆய்வு மையம் புவியில் நிலத்தில் அல்லது கடலில் விழும்" என்று குறிப்பிட்டுள்ளதோடு விழக் கூடிய இடங்களது வரைபடத்தையும் வெளியிட்டுள்ளது.



உலக வங்கி ரஷ்யா, பெலாரஸ் ஆகிய நாடுகளில் முன்னெடுக்கின்ற அனைத்து வேலைத்திட்டங்களையும் நிறுத்துவதாக அறிவித்துள்ளது. இப்போருக்கு எதிராக அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் அவற்றின் நேசநாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இதேவேளை இப்போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் உலகளாவிய நிறுவனங்களும் பல்தேசிய கம்பனிகளும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

பிரித்தானியாவின் பி.பி. நிறுவனம் ரஷ்யாவின் ரோஸ் நெப்ட் நிறுவனத்தில் முதலிட்டுள்ள பங்குகளை முழுமையாக விற்பனை செய்துவிட்டு ரஷ்யாவிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளது. அதேநேரம் ஷெல் எக்ஸான், மொபில், ஈக்வினார் போன்ற நிறுவனங்கள் ரஷ்யாவில் மேற்கொண்டுள்ள முதலீடுகளை திரும்பிப் பெற ஆரம்பித்துள்ளன. டோட்டால் நிறுவனம் ரஷ்யாவில் இனி முதலீடு செய்வதில்லை எனக் குறிப்பிட்டுள்ளது.

விஸா, மாஸ்டர் கார்ட், மைக்ரோசொப்ட், பேஸ்புக், இன்ஸ்டகிராம், யூரியூப், இன்டெல், ஏர்பிஎன்பி மற்றும் மெக்டொனால்ட், பெப்சி, கோகோ கோலா மற்றும் ஸ்டார் பக்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களும் தங்களது விற்பனை செயற்பாடுகளை ரஷ்யாவில் நிறுத்தியுள்ளன. பெப்சி மற்றும் மெக்டொனால்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் பல தசாப்தங்களுக்கு முன்பிருந்தே சோவியத் யூனியனுடனும் இணைந்து பணியாற்றி வந்துள்ளன. அது சர்வதேச அளவில் ரஷ்யாவின் உறவுகள் மேம்பட வழிவகுத்துள்ளது. மெக்டோனால்ட் நிறுவனம் 1990 முதல் ரஷ்யாவில் செயற்படத் தொடங்கியது. ஆனால் உக்ரைன் மீதான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யாவில் இருந்த 847 களஞ்சியங்களை மெக்டோனால்ட் நிறுவனம் மூடியுள்ளது. அதன் விளைவாக மாத்திரம் 62, 000 பேர் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர்.

ஸ்டார்பக்ஸ் நிறுவனமும் இப்போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யாவிலுள்ள அதன் நூற்றுக்கணக்கான கடைகளை தற்காலிகமாக மூடுவதாக அறிவித்துள்ளது. கொகோ கோலா நிறுவனம் 1980 முதல் ரஷ்யாவில் செயற்படுகிறது. அந்நிறுவனமும் தம் செயற்பாடுகளை நிறுத்தியுள்ளது.

நேட்டோவில் அங்கம் வகிக்கும் பின்லாந்து நாட்டின் நிறுவனங்களான பேஸர், வாலியோ மற்றும் பௌலிக் உள்ளிட்ட நிறுவனங்களும் தங்களது செயல்பாடுகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளன.பேஸர் நிறுவனம் சொக்லேட் மற்றும் கேக் வகைகளைத் தயாரிக்கின்றது. அந்நிறுவனத்தில் 2,300 பணியாளர்களும் வாலியோ நிறுவனத்தில் 400 பேரும் பௌலிக் நிறுவனத்தில் 200 ஊழியர்கள் பணிபுரிந்துள்ளனர்.

மேலும் ரஷ்யாவில் இயங்கி வரும் வெளிநாடுகளைச் சேர்ந்த டோயோட்டா, வொக்ஷ்வோகன், ஜகுவார், லேண்ட ரோவர், மேசிடெஸ் பென்ஸ், போர்ட், பி.எம்.டப்ளியூ ஆகிய வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது வாகன உற்பத்தியையும், ஏற்றுமதியையும் நிறுத்தி வைத்துள்ளன.

உக்ரைன் மீதான போருக்கு எதிராக ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு அங்குள்ள பல்தேசிய வெளிநாட்டு நிறுவனங்கள் இவ்வாறான நடவடிக்கையை முன்னெடுத்துள்ள போதிலும், அந்நிறுவனங்கள் தம் பணிகளைத் தொடங்காவிட்டால் அவற்றை அரசுடைமையாக்கப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் ரஷ்யாவை பொருளாதார ரீதியில் பலவீனப்படுத்துவதோடு பெருந்தொகையானோர் வேலைவாபை்பை இழக்கவும் வழி செய்யும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.



இப்போரினால் கடந்த 15 நாட்களில் 23 இலட்சத்துக்கும் மேற்பட்ட உக்ரைன் மக்கள் தம் வாழிடங்களை விட்டு வெளியேறி அயல்நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். சுமார் 1200 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர். அத்தோடு உக்ரைனின் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு மேலதிகமாக 202 பாடசாலைகள், 34 வைத்தியசாலைகள், 1500 குடியிருப்புக்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், பொதுக்கட்டடங்கள் பெரிதும் சேதமடைந்துள்ளன. மக்கள் வாழும் சுமார் 900 குடியிருப்புக்கள் மின்சாரம், தண்ணீர், ஹீட்டர் வசதிகளை முற்றாக இழந்துள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

## உக்ரைனை பலிக்கடாவாக வைத்து மேற்குலகம் தீட்டிய தந்திரத்தில் சிக்கிக் கொண்ட ரஷ்யா!

போர் இடம்பெறும் பிரதேசங்கள் அழிவுகளும் சேதங்களும் நிறைந்து சாம்பல் மேடாகக் காட்சியளிப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு எதிராக வல்லரசு நாடுகளும் பல்தேசியக் கம்பனிகளும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் சில சந்தேசங்களை எழுப்பவே செய்கின்றன. ஏனெனில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து அமைதி சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக ரஷ்யாவை கோபமடையச் செய்வதன் ஊடாக பொருளாதார ரீதியில் அந்நாட்டை பலவீனப்படுத்தி வீழ்ச்சியடையச் செய்யும் வகையிலேயே இந்நடவடிக்கைகள் அமைந்திருப்பதாகத் தெரிகிறது.



## ரஷ்யா–உக்ரைன் யுத்தமானது மூன்றாம் உலகப் போரை நோக்கி நகர்வதாக அச்சம்!

இற்றைக்கு 44 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1979 இல் ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சோவியத் யூனியன் போர் தொடுத்தது. என்றாலும் 1989 இல் ஆப்கானிஸ்தானை கைவிட்டு வெளியேறிச் சென்றது சோவியத் யூனியன். அந்த பத்தாண்டு கால யுத்தத்தில் பொருளாதார ரீதியில் சோவியத் யூனியன் பெருவீழ்ச்சி கண்டது. அதன் விளைவாக 1991 ஆகும் போது சோவியத் யூனியனே பிரிந்து 15 தனித்தனி நாடுகளாகியது. அவற்றில் உக்ரைனும் ஒன்றாகும். இவ்வாறு சோவியத் யூனியன் சிதைவடைந்து 31 வருடங்கள் கடந்துள்ள சூழலில்தான் ரஷ்யா இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றது. உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுப்பதற்கான அனைத்து உசுப்பேற்றல்களையும் மேற்கொண்ட அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் நேட்டோவும் போர் ஆரம்பமானதும் உக்ரைனுக்கு நேரடியாக உதவுவதைத் தவிர்த்துக் கொண்டன. தம்மைக் காப்பாற்றுமாறு உக்ரைன் ஜனாதிபதி அபயக்குரல் எழுப்பிய போதிலும், இந்த யுத்தத்திற்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று அந்நாடுகளும் நேட்டோவும் கூறி விட்டன.

அதேநேரம் இப்போரை நிறுத்தி அமைதி, சமாதான வழிக்கு ரஷ்யாவைக் கொண்டு வரும் முயற்சிகளை விடுத்து அந்நாட்டுக்கு எதிராக பொருளாதார தடைகள் உள்ளிட்ட எல்லாத் தடைகளையும் இந்நாடுகள் முன்னெடுத்துள்ளன. இதன் ஊடாக ரஷ்யாவைப் பொருளாதார ரீதியில் வீழ்த்தி பலமிழக்கச் செய்வதற்கான முயற்சியாகவே இந்நடவடிக்கைகளை நோக்க வேண்டியுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாகப் பலவீனமடையும் ரஷ்யாவில் 1991 ஐப் போன்று மீண்டும் பிளவுகள் ஏற்படுத்தி அந்நாட்டை துண்டாடவே முயற்சிக்கப்படுவதாகத் தெரிகிறது. அதாவது ரஷ்யாவைப் பலவீனப்படுத்த அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் உக்ரைனை வைத்து விரித்த சதிவலையாகக் கூட இருக்கலாம் இப்போர் என்ற அபிப்பிராயம் ஆய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றன.

ஏனென்றால் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் உலகின் பல நாடுகளிலும் முன்னெடுத்த தன்னிச்சையான படை நடவடிக்கைகளுக்கு எதிராக தலையீடு செய்து செயற்படும் நாடாக ரஷ்யா இருந்து வருகிறது. அதனால் அந்நாட்டைப் பலவீனப்படுத்துவதன் மூலம் அவ்வாறான தலையீடுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அதற்காக உக்ரைன் அழிந்து சாம்பலானாலும் பரவாயில்லை. தம் எதிர்பார்ப்பு நிறைவேறினால் போதும் என்ற நிலைப்பாட்டில் மேற்குலக நாடுகள் செயற்படுவதாக விளங்குகிறது.



ஆகவே கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு அழிவுகர யுத்தத்தை விரைவாகவும் வேகமாகவும் முடிவுக்குக் கொண்டு வருவதும், அமைதி சமாதானத்தை ஏற்படுத்துவதுமே இன்றைய அவசரத் தேவையாக உள்ளது.

**மர்லின் மரிக்கார்...**

# கிழக்கு கல்விப்பணியில் மகுடம் சூடிய சமூக சேவையாளர் அமரர் தியாகராஜா

சேவையையும் நேர்மையையும் இரு கண்களாகக் கொண்டு அரச சேவைக்கு புகழ் சேர்த்த கந்தையா தியாகராஜா தனது 68 ஆவது அகவையில் அமரத்துவம் அடைந்தார். தனக்கென வாழாது, சமூக முன்னேற்றத்திற்கு தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த மனிதர்களுள் மட்டக்களப்பைச் சேர்ந்த அமரர் தியாகராஜாவும் ஒருவர்.

அவர் கல்வி, கலை, கலாசார, சமய, இலக்கிய மற்றும் பண்பாட்டுத் துறைகளில் ஆற்றிய பணியை நினைவுகூர்ந்து தியாகராஜா அறக்கட்டளை நிறுவகம் 'தியாகராஜம்' எனும் நூலை வெளியிடவுள்ளது. மட்டக்களப்பு மாநகர நூலக மண்டபத்தில் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் எதிர்வரும் 20.03.2002 ஞாயிற்றுக்கிழமை நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

கிழக்கின் இதயமெனத் திகழும் மட்டக்களப்பில், ஆன்மிக மணம் கமழும் கல்லடியில் வளமாகவும் வசதியாகவும் வாழ்ந்த கந்தையா_ சின்னப்பிள்ளை தம்பதியரின் ஒரே வாரிசாக 20.03.1935 இல் தியாகராஜா பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வியை கல்லடி விவேகானந்தா கல்லூரியிலும், இரண்டாம் நிலைக் கல்வியை சிவானந்தா கல்லூரி மற்றும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலும் பெற்றார். பின்பு 1955 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்குத் தெரிவாகி தனது பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

இந்நிலையில் அவர் ரஞ்சிதம் சொர்ணம்மாவைக் கரம்பிடித்து கலாசாரப் பண்புகளோடும் இறைபக்தியை மூலதனமாகக் கொண்டும் வாழ்ந்தார். அவர்களுக்கு 4 பெண் பிள்ளைகளும், 3 ஆண் பிள்ளைகளும் பிறந்தனர். அவரது மகனான தியாகராஜா சரவணபவான் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வராக 2018 முதல் தற்போது வரை பதவி வகித்து சேவைகள் செய்து வருகின்றார்.

சேவையையும் நேர்மையையும் இரு கண்களாகக் கொண்டு பாடசாலை ஆசிரியராக, அதிபராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக, பிரதம கல்வி அதிகாரியாக, மாவட்டக் கல்விப் பணிப்பாளராக, மாநகர முதல்வராக மற்றும் வடகிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கடமை புரிந்து வந்தவர் அமரர் தியாகராஜா.

கல்வியின் கருவூலமாய் ஆற்றலும், அறிவுத் திறனும், தேடலும், வாசிப்புத் திறனும் மிகுந்து கல்வித் துறையிலே தகைமை நிறைந்த தலைமை அதிகாரியாகவும் புகழ்பெற்ற கல்விமானாகவும் அவர் திகழ்ந்தார். அரசியலில் 1971 முதல் 1973 வரை மட்டக்களப்பு மாநகர முதல்வராகவும் வாழ்ந்து, அரச கல்விச் சேவை மற்றும் அரசியல் சேவைக்கு மகுடம் சூட்டியவர்.



அவரது சேவைக் காலத்தில் நேரமுகாமைத்துவம் அவரது உயர்ச்சிக்கு ஊன்றுகோலாகக் காணப்பட்டது. சிவானந்தா வித்தியாலயத்தில் கடமையாற்றும் போது 1971 இல் மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டார். அவரின் தேர்தல் பிரசார சுவரொட்டியை அவரது வகுப்பு மாணவர்களில் சிலர் ஒட்டிவிட்டு அன்றைய தினம் வகுப்பிற்கு நேரம் தாமதமாகி வந்த போது அவர்களை பிரம்பினால் தண்டித்தார். அப்போது மாணவர்கள் "உங்களின் தேர்தல் சுவரொட்டியை ஒட்டியதால் தான் நேரத்திற்கு வர முடியவில்லை. தாமதமாகிவிட்டோம் எனத் தெரிவித்த போது "அது உங்கள் வேலையில்லை. நீங்கள் வகுப்பிற்கு நேரத்திற்கு வந்திருக்க வேண்டும்" எனப் பதிலளித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மற்றும் அக்கரைப்பற்று இராம கிருஷ்ண மிசன் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1956 களில் தனது பல்கலைக்கழக காலத்தில் பேராசிரியர் வித்தியாதரனின் நெறியாள்கையில் படைக்கப்பட்ட 'துரோகி' என்ற நாடகத்தில் நடித்து சிறந்த நாடகக் கலைஞராகப் பெயர் பெற்றவர்களுள் தியாகராஜாவும் ஒருவராவார். மட்டக்களப்பின் மரபுவழிப் பண்பாடு கலை கலாசாரங்களைச் சித்தரிக்கும் கூத்துகள்,அண்ணாவிமார் மற்றும் கலைஞர்களின் பேட்டிகள் மற்றும் உரைகளை ஒளிப்பதிவு செய்து ஆவணப்படுத்தினார்.

ஆன்மீகப் பணியில் 20 வருடங்களாக மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையில் பொருளாளராகப் பணிபுரிந்து வந்த நிலையில், 1978 இல் வீசிய கொடிய சூறாவளியினால் ஆலயம் பாதிக்கப்பட்டது. அதன் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு ஆலயத்தின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணிப்பு செய்தார். அத்தோடு விபுலானந்தா நூற்றாண்டு சபையின் தலைவராக கவிருந்து இராமகிருஷ்ணமிசனுடன் இணைந்து ஆன்மிகப் பணியாற்றினார்.

அமரர் தியாகராஜா நேர்மை, நிதானம், நல்லொழுக்கம் மற்றும் அமைதி என்பனவற்றைக் கடைப்பிடித்து சேவைகள் செய்தமை மற்றும் கல்வியில் அவர் கொண்டிருந்த புலமையினால் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநரின் மட்டக்களப்பு_அம்பாறை பிராந்தியங்களுக்கான ஆணையாளராகவும் கடமை புரிந்தார். அவரின் அறிவு, வழிகாட்டல், பிறர் கருத்தை மதிக்கும் மனப்பாங்கு மற்றும் திறமையுடையவர்களை இனங்கண்டு அவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கும் மனப்பாங்கானது அவரிடமிருந்த பண்புகளாகும்.

இக்குணாதியங்களினால் அவர் மட்டக்களப்பின் சகல இன மக்களாலும் மதிக்கப்பட்டார். இக்காலத்தில் சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர்கள் அன்னாருக்கு 'வித்தியா ஜோதி' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். கிழக்குப் பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினராகவிருந்து 10.06.1996 இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இறைபக்தியை மூலாதாரமாகக் கொண்டு தனது சேவைகளை செய்து வந்தார். கடவுள் பக்தியில் கொண்ட ஈடுபாடு மற்றும் ஆன்ம திருப்தி காரணமாக அதிகாலையில் தியானத்தில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வழமை போல் 25.09.2003 அன்று காலைக்கடன்களை முடித்துக் கொண்ட பின்னர், சாமியறையில் இறைவணக்கத்திற்குச் சென்றவர் மீண்டு வரவில்லை. அவ்விடத்திலேயே இறையடி சேர்ந்தார். கிழக்கின் அரும்பெரும் சொத்து அவர். கல்வியின் பெருங் கருவூலம். சமய, சமூக, கல்வி, கலாசார இலக்கிய மற்றும் பண்பாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவரின் புகழ் நல்லோர் மனங்களில் என்றும் வாழும்.



**அமரரின் பணிகளை நினைவு கூர்ந்து எதிர்வரும் ஞாயிறன்று நூல் வெளியீடு**

**சிவம் பாக்கியநாதன்...**
மாநகரசபை உறுப்பினர், மட்டக்களப்பு

# வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி வருவாய் ஒரு பில்லியனை கடந்தது

## ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னொருபோதும் இல்லாதவகையில் வாசனைத்திரவிய ஏற்றுமதி மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் ஒரு பில்லியன் மற்றும் ஒரு இலட்சத்து மூவாயிரம் ரூபா வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கு முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில், இது 41 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாசனைத் திரவிய ஏற்றுமதியில் அதிக இலாபம் கறுவாப்பட்டை ஏற்றுமதி மூலமே கிடைத்துள்ளது. நாட்டிலிருந்து 18,814 மெட்ரிக் தொன் கறுவாப்பட்டை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் 45879 மில்லியன் ரூபா வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 20 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, மெக்ஸிக்கோ, பெரு உள்ளிட்ட பல நாடுகளுக்கு இலங்கையிலிருந்து பெருமளவு கறுவாப்பட்டை ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பிரசார நடவடிக்கைகளையடுத்து ஏற்றுமதியை அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க மிளகு ஏற்றுமதி மூலம் கடந்த வருடத்தில் 22,669 மில்லியன் வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் 17,959 மெட்ரிக் தொன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில் பல்வேறு துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் ஏற்றுமதி வருமானம் குறிப்பிட்டளவு அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# குற்றவியல் வழக்கு கோவை சட்ட திருத்தம்; அமைச்சரவை அங்கீகாரம்

ஏதேனுமொரு நபர் குற்றமிழைக்கும் போது, அந்த நபரின் வயது 18 வயதுக்குக் குறைவாயின் மரண தண்டனை வழங்குவதைத் தடை செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான நீதி வழங்கலுக்கான உடன்பாட்டின் குறைந்தபட்ச ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதாக அமையும் வகையில், குற்றவியல் வழக்குக் கோவை சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதே வேளை நீதி வழங்கும் செயன்முறையை வலுப்படுத்துவதற்காகவும், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காகவும் தேவையான சந்தரப்பங்களில் வழக்கு விசாரணைகளின் போது செவிப்புல – கட்புலத் தொடர்பாடல் உதவியுடன் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, திறந்த நீதிமன்றங்களில் சாட்சியாளர் ஒருவரால் வழங்கப்படும் வாய்மொழிமூல சாட்சிகள் தொடர்பான ஏற்பாடுகளை உள்வாங்குவதற்காக குடியியல் சட்டக்கோவையின் 167(அ) தொடக்கம் 167(ஓ) வரை புதிய உறுப்புரைகளை உட்சேர்த்து திருத்தம் செய்வது பொருத்தமானதென அதுதொடர்பான விடயங்களைப் பரிசீலித்துப் பார்ப்பதற்காக நீதி அமைச்சரினால் உருவாக்கப்பட்டுள்ள டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் நீதிமன்ற தானியங்கமயப்படுத்தல் தொடர்பான சட்டக்குழு மற்றும் குடியியல் சட்ட மறுசீரமைப்புக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப் பரிந்துரைகளின் அடிப்படையில் குடியியல் வழக்குக் கோவையை திருத்தம் செய்வதற்கும், அதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ...

அரசாங்கம் மேற்படி நிதியை பயன்படுத்த உள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய அரசாங்கம் இலங்கைக்கு 1.9 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை கடனுதவியாக வழங்குவதற்கு இணக்கமளித்துள்ள நிலையில் அதில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்கனவே நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மீதமான 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியாகவும் அத்தியாவசியப் பொருட்களாகவும் நாட்டுக்குக் கிடைக்கவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ஸ)

## மரண அல்லது காணக்கிடைக்கவில்லை ...

சான்றிதழை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, அந்த அலுவலகத்தால் கண்டறிப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுள்ள காணாமல் போனவர்களின், குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியை, ஒருமுறை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

## சர்வதேச நாணய நிதியத்துடன்...

மக்களுக்கு அதிக வசதிகளை வழங்குவதே தமது நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார். இருப்பினும், 1977 முதல் ஆட்சி செய்த ஒவ்வொரு அரசாங்கமும் கடன் வாங்கி அதை முறையாக செலுத்தின, ஆனால் 2020 இல் கொரோனா தொற்றுநோயால், வெளிநாட்டு இருப்புக்கள் குறைந்துவிட்டன, மேலும் 2020/21 இல் மட்டும் நாட்டின் பண அனுப்புகை 10 பில்லியன் அமெரிக்க டாலர்களால் குறைந்தது.

வெளிநாட்டு சுற்றுலா மற்றும் பண அனுப்புகையில் ஏற்பட்ட மந்தநிலையால் ஏற்பட்ட நெருக்கடியானது அடுத்த 12 வருடங்களில் 42 பில்லியன் அமெரிக்க டொலர் கடனில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.இதற்காக வாகனம் உள்ளிட்ட சொகுசு பொருட்கள் அனைத்தையும் இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். இந்த நிலைமையிலிருந்து மீண்டெழும் நிலையில் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் போர்ச் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பொருளாதாரம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நெருக்கடியை சமாளிக்க தற்போதைய அரசாங்கம் பல்வேறு நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களிடம் ஆலோசனைகளை பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் தான் வாங்கிய கடனை அன்றி முன்னர் பெறப்பட்ட கடனையே மீளச் செலுத்துவதாகவும் அரசாங்கம் என்ற ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் தாங்கள் அதிகபட்ச தியாகங்களை செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## பல வீதிகளில் போக்குவரத்து...

இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் இந்த பேரணி சென்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் பல்வேறு வீதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ஸ)

## IMF பிரதிநிதிகளுடன்...

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் மேலதிக செயலாளர் சந்திமா விக்கிரமசிங்க ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## ரயில் கட்டணங்களில் ...

இதனால் ரயில் கட்டணங்களும் குறிப்பிடத்தக்க வீதத்தால் எதிர்காலத்தில் அதிகரிக்க இருக்கிறோம். அது தொடர்பான கட்டண மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

15 வீதத்தினால் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு நீண்டகாலமாக ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படாததால் அதனை ஒத்த தொகையினால் ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.(பா)

## முச்சக்கர வண்டிகளுக்கு மீட்டர் ...

தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்ககளில் அதிக கட்டணம் அறவிடுவது சட்டவிரோதமானது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி TNA...

செய்யப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய அரசியலமைப்பு திருத்தம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் மேற்படி பேச்சுவார்த்தையின்போது கலந்துரையாடப்படவிருந்ததாகவும் எவ்வாறெனினும் இந்த பேச்சுவார்த்தை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ)

## கொவிட் தொற்று,...

என்று விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் திங்கட்கிழமை (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இத்தகவலைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

நாட்டில் தற்போது நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கை 350 – 400 ஆகக் குறைவடைந்துள்ளது. அதே போன்று மரணங்களின் எண்ணிக்கையும் 10 ஐ விடக் குறைவாகவே பதிவாகிறது.

கொவிட்19 தொற்றாளர்களுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள 14,000 சிகிச்சை படுக்கைகளில் 28 சத வீதம் மாத்திரமே பாவனையிலுள்ளன. ஒட்சிசன் தேவையுடையோர் எண்ணிக்கை 41 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும் கடந்த வாரம் இது 30 சத வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதுவரையில் 96 சத வீதமானோருக்கு முதற்கட்ட தடுப்பூசியும் , 81 சத வீதமானோருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது. 53 சத வீதமானோருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. பெருமளவானோர் இரண்டாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றியமையே தற்போது கொவிட் 19 தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமைக்கான காரணமாகும். எவ்வாறிருப்பினும் இதே நிலைமை தொடரும் என்று கூற முடியாது. எனவே அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு தொடர்ந்தும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி பொறுப்புடன் செயற்படுமாறு மக்களை கேட்டுக் கொள்கின்றோம் என்றார். .

## போதைப்பொருளுடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னார் பேசாலை, ஜூட் வீதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோகிராமிற்கும் அதிகமான ஐஸ் போதைப் பொருளைபொலிஸார்கைப் பற்றியுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பின் போது அதேபகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப்பிரிவு, கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியானவை என தெரிவித்துள்ளது.

## முதலீட்டு ...

(03ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை நாடளாவிய ரீதியில் பல அலகுகள் பிரிக்கப்பட்டு சில மணித்தியால மின்சாரத் துண்டிப்பு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

# 'பாராளுமன்றத்திலிருந்து நூலகம் வரை' வேலைத்திட்டம் பொது நூலகத்திலிருந்து ஆரம்பம்



இலங்கைப் பாராளுமன்றம் தொடர்பான சரியான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'பாராளுமன்றத்திலிருந்து நூலகம் வரை' நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்றது.

பாராளுமன்றம் தொடர்பான நூல்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை நாடளாவிய ரீதியில் உள்ள பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களுக்கு வழங்குவதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

இதன் ஓர் அங்கமாக பாராளுமன்ற முறைமைகள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி பாராளுமன்ற உயர் அதிகாரிகள் மற்றும் பொது நூலக அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. பாராளுமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம், சட்டவாக்க செயற்பாடுகள் மற்றும் பணிகள், குழு முறைமை தொடர்பில் இதன்போது நூலக அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், பாராளுமன்றத்தின் பிரசுரமான 'பாராளுமன்ற சார சங்ஹிதா' புலமை நூலும் வழங்கிவைக்கப்பட்டது. இதற்கு சமாந்தரமாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட உயரதிகாரிகளுக்கு கொழும்பு பொது நூலகத்தின் அங்கத்துவ அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், பாராளுமன்றத்தின் பணியாட்கள் தொகுதியின் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக உள்ளிட்ட உயர் அதிகாரிகள் சிலர் கலந்து கொண்டனர்.

## இரண்டு ஒழுங்கு விதிகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 155ஆம் மற்றும் 157ஆம் பிரிவுகளின் கீழ் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 28ஆம் திகதிய 2251/48 இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடங்கலாக 2022 பெப்ரவரி 07ஆம் திகதிய 2266/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் 2022 ஜனவரி 15ஆம் திகதிய 2262/50 இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடங்கலாக 2022 பெப்ரவரி 07ஆம் திகதிய 2266/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி என்பவற்றுக்கு இங்கு அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், 2014 காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகளின் 03ல் அ, ஆ, இ, ஈ மற்றும் உ பந்திகளில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் மற்றும் மானியங்களுக்கான பத்திரங்களை வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் வருமான எல்லையை திருத்துதல் மற்றும் 1985ஆம் ஆண்டு காணி கட்டளை 115 இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் மற்றும் அளிப்புப் பத்திரத்திரத்துக்கான அதி குறைந்த பங்குகள் என்பன இந்த ஒழுங்கு விதிகளின் ஊடாக திருத்தப்படவுள்ளன.

## மதுபான விலைகள்... (03ஆம் பக்கத் தொடர்)

மதுபான தயாரிப்பு செலவுகள் அதிகரித்துள்ள நிலையிலேயே மதுபான வகைகளின் விலைகளை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மேற்படி விலையதிகரிப்பு மதுபான உற்பத்தி செலவுகள் அதிகரிப்பு காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அதற்கு கலால் திணைக்களத்தின் அனுமதி அவசியமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க 750 மில்லி லீற்றர் அதி விசேஷ சாராய போத்தலின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.அத்துடன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பியர் வகைகளினதும் விலைகள் 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக டி.சி.எஸ்.எல் நிறுவனம் தெரிவித்துள்ளது.(ஸ)

## யாழ். மாணவன் கஜலக்ஷனுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

டலஸ் அழகப்பெரும நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. நாட்டின் வரலாற்றில் மிகவும் கடினமான மற்றும் சவால்களுக்கு மத்தியில் இந்த பரீட்சை இடம்பெற்றதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், புலமைப்பரிசில் பரீட்சையில் இவ்வருடம் அதிகூடிய சித்திகளைப் பெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்செல்வம் கஜலக்ஷன் உட்பட சகல மாணவர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

2021 பராஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்ற தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு வீடொன்றை வழங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## நடைமுறைசாத்தியமான... (03ஆம் பக்கத் தொடர்)

வருத்தமும் வேதனையும் அடைவதாகவும், வறுமையின் அடிமட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரஜை என்ற வகையில் தான் தனிப்பட்ட ரீதியில் இந்த நிலையை அனுபவிப்பதாகவும் அமைச்சர் கூறினார். 3040 நிமிடங்கள் டீசல் வரிசையில் நின்ற அனுபவம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கஷ்டமான பொருளாதார வீழ்ச்சி, சமூக அழுத்தம் என்பவற்றுக்கு அனைவரும் முகம்கொடுத்துள்ளதாகவும் இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். 69 இலட்சம் பேரின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் இருக்கும் தரப்பிற்கு அதன் வேதனையும் அழுத்தமும் நன்கு உணரக்கூடியாக உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக சமூகத்தில் உள்ள புத்திஜீவிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் அரச மற்றும் தனியார் துறை நிபுணர்கள் போன்றோரை இணைத்து தற்போதைய நெருக்கடி நிலையை முகாமைத்துவம் செய்வது குறித்து பொருளாதார சபை ஆழமாக ஆராய்ந்து வருகிறது. இந்த நெருக்கடி நிலையை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய அறிவார்ந்த கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார். (பா)

## துபாயில் நடைபெற்ற உலக... (03ஆம் பக்கத் தொடர்)

காவல் துறையின் தரத்தை மேம்படுத்துவதற்கான முன்னணி உலகளாவிய தளமாகும். பிரதிப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான லெப்டினன்ட் ஜெனரல் ஹிஸ் ஹைனஸ் ஷேக் சைஃப் பின் சயீத் அல் நஹ்யானை இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. டிசம்பர் 2021 முதல், இலங்கை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சட்ட அமுலாக்க ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட்டு வருவது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

## நம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும்... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவு செய்து, உர விநியோக நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

எதிர்கால சந்ததியினருக்கு நஞ்சற்ற உணவை வழங்கும் நோக்கத்தில், பசுமை விவசாய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இரசாயன உரங்கள் மற்றும் களைக்கொல்லிகளுக்குப் பழக்கப்பட்ட விவசாயிகளை சேதனப் பசளை விவசாயத்தில் ஈடுபடுத்துவது சவாலான ஒரு பணியாகும். எவ்வாறாயினும், அனைத்து மட்டங்களிலும் உள்ள அதிகாரிகள் மிகுந்த உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் மற்றும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு, வெற்றிகரமான முடிவுகளை அடைய முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

விவசாயிகளை உரிய முறையில் தெளிவுபடுத்துவதுடன், உரிய நேரத்தில் தரமான உரங்களை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

கடந்த சில அரசாங்கங்களுக்கு விவசாயத்தில் நம்பிக்கை இருக்கவில்லை. பாரம்பரிய விவசாய நாடான இலங்கையை அதில் தன்னிறைவு அடையச்செய்து, விவசாயிகளைப் பலப்படுத்துவதே தனது நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அனைத்து உற்பத்தி நிறுவனங்களும் நீண்டகாலமாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வெற்றிகரமான முடிவுகளை எட்டியுள்ளன. அவர்களின் அறிவு மற்றும் தரமான உற்பத்திகளை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் எதிர்பார்த்த பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தாம் நம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வாரத்திற்கு இரண்டு தடவைகள் அரசாங்க அதிபர்கள் தலைமையில் உரக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சுட்டிக்காட்டியதோடு, உர உற்பத்தியாளர்களுக்கு பாரிய பொறுப்பு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பெரும் போகத்தில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி வெற்றியடைந்துள்ளதாக உர உற்பத்தி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், அமைச்சுக்களின் செயலாளர்கள், பாதுகாப்புப் படைகளின் பிரதானி மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, உர செயலக அதிகாரிகள், உர உற்பத்தி நிறுவனங்களின் தலைவர்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியிருந்ததோடு, அனைத்து மாவட்ட செயலாளர்களும் காணொளி தொழிநுட்பம் மூலம் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## நாட்டில் எந்தவித மருந்து... (03ஆம் பக்கத் தொடர்)

தட்டுப்பாடு ஏற்பட முடியாது. எனினும் மருந்தை வைத்துக் கொண்டு சில தரப்பினர் அரசியல் செய்ய முனைகின்றனர்.

ஊடகங்களில் முகங்களை காட்டுவதற்காகவும் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் சிலர் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக ஊடகங்களில் பொய் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

சிலர் 30 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு என்றும் சிலர் 50 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு என்றும் பொய்களை கூறி மக்களை திசை திருப்ப முயற்சிக்கின்றனர். எனினும் கைவசம் உள்ள மருந்துகள் மற்றும் தேவையான மருந்துகள் தொடர்பாக நாம் முழுமையான கவனத்தை செலுத்தி வருகின்றோம். அது தொடர்பில் நாம் தினமும் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

புத்தளம் பஸ் நிலையத்தில்;

## பாலூட்டும் தாய்மார்களுக்கு விசேட அறை திறந்து வைப்பு



புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் சகிதம் புத்தளம் மத்திய பஸ் நிலையத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கான அறையை அண்மையில் திறந்து வைத்தார்.

பொது இடங்களில் பாலூட்டும் தாய்மார் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு இத்திட்டம் புத்தளம் நகர சபையால் தொடர்ந்து முன்னெடுக்கப்படவிருக்கின்றது.

இலங்கையில் முதன் முறையாக நகர சபையினால் பொது பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் புத்தளம் நகர சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவும் மகளிர் தினத்துக்கான நகர சபையின் அன்பளிப்பாகவும் இத்திட்டம் அமையப் பெறுவது விஷேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், நகர சபை உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

சர்வதேச மகளிர் தினத்தில்

# 14 வறிய குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கி வைப்பு



பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு துறைமுக கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் வழிகாட்டலில் களுத்துறை மாவட்டத்தில் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகும் பிரதேசங்ளைச் சேர்ந்த வீடற்ற பதினான்கு குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கி அவர்களின் வாழ்க்கைக்கு வலுவூட்டப்பட்டது.

தேசத்துக்கு முக்கியமானதும் மகளிரை வலுப்படுத்தும் இந்த வேலைத்திட்டம் சர்வதேச மகளிர் தின நிகழ்வுடன் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுசன முன்னணி மகளிர் அமைப்பின் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## வேலணையில் கத்திகுத்து மூவர் வைத்தியசாலையில்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் வேலணை பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற கத்திகுத்து சம்பவத்தில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாய் மற்றும் மகள் ஆகியோர் மீது நபர் ஒருவர் வீடு புகுந்து சரமாரியாக கத்தியால் குத்தி விட்டு, தற்கொலைக்கு முயன்றுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் அறிந்த அயலவர்கள் மூவரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வாகையடிப்பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதியோரம் காணப்பட்ட கம்பத்துடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் கச்சாய் தெற்கு பகுதியைச் சேர்ந்த எஸ்.சாருஜன் என்ற இளைஞன் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில்; சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி சிறந்த பெறுபேறு; 16 மாணவிகள் சாதனை

பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)யிலிருந்து புலமைப்பரிசிலுக்கு தோற்றிய மாணவர்களுள் 16 பேர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் பஹீமா பாயிஸ் தெரிவித்தார்.

கடந்த வருடத்தை விட இம்முறை அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து களுத்துறை மாவட்டத்தில் முன்னணி பாடசாலையென்ற பெருமையை மேலும் தக்கவைத்துள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலையிலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் விபரம்; ஸிம்னா ஸிஹாம் (179), சைரீன் மில்ஹான் (173), ஹப்ஸா ஹாரூன் (172), லீனா இம்தியாஸ் (169), மனார் இத்பான் (169), ஆயிஷா ரஹ்மத் பிர்ஸான் (166), ஆயிஷா மர்யம் கியாஸ் (161), இம்லா இர்பான் (159), அப்தா தவ்லத் (158), ரஷாதா இர்பான் (155), அமானா இஷ்பான் (154), நுஹா நாஸிக் (153), குல்ஸூம் இர்ஷாத் (153), ஸலாமத் சஸீனா இஹ்ஸான் (152), நஸ்ஹத் ஆயிஷா முபஷ்ஷிர் (149), ஆயிஷா மர்யம் ரிஸ்மி (149) ஆகிய மாணவிகள் சிறந்த புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளதோடு பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களுக்கு சிறந்த கல்விப்போதனைகளை வழங்கிய ஆசிரிய குழாம் உட்பட பகுதி நேர ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் பாடசாலை அதிபர் மாணவிகள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட தமிழ்நாடு, இராமநாதபுரம் தொகுதி, இந்திய பாராளுமன்ற (லோக் சபா) உறுப்பினரும்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழக மாநிலத் துணைத் தலைவருமான கே.நவாஸ்கனிக்கு ,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் சனிக்கிழமை (12) கொழும்பில் தமது இல்லத்தில் இராப்போசன விருந்துபசாரமளித்தார். அதில் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் செய்யத் அலி சாஹிர் மௌலானா, முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் என்.எம் அமீன், தமிழக "மணிச்சுடர்" ஊடகவியலாளர் சாஹுல் ஹமீத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




இலங்கையிலுள்ள சகல வைத்தியசாலைகளையும் இணைய தளத்தின் ஊடாக ஒருங்கிணைப்பதற்கான 'ஸ்வஸ்தி' தகவல் முகாமைத்துவ கட்டமைப்பை உருவாக்குவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் கணனிகளும் அதற்குரிய உதிரிப் பாகங்களும் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தலைமையில் வழங்கி வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.






## உக்ரைன் தொடர்பாக நெதர்லாந்து பிரதமருடன் மோடி பேச்சு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த செவ்வாயன்று நெதர்லாந்து பிரதமர் மார்க் ருட்டுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உக்ரைன் விவகாரம் தொடர்பாகப் பேசினார். இரு நாட்டு பிரதமர்களும் யுத்தம் ஏற்படுத்தியிருக்கும் மனிதாபிமான பிரச்சினைகள் தொடர்பாக கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இரு தரப்பாரும் இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும் என்றும் தன் கருத்தை தெரிவித்த பிரதமர் மோடி, தற்போது நடைபெற்றுவரும் இருதரப்பு பேச்சுவார்த்தையை வரவேற்றதோடு ஒரு தீர்வு விரைவிலேயே எட்டப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

உக்ரைனில் இருந்து இந்தியர்களை மீட்டது தொடர்பாகவும் உக்ரைனில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தது தொடர்பாகவும் நெதர்லாந்து பிரதமரிடம் மோடி விளக்கினார் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# சிறுபான்மையினர் உரிமைகளை காக்கும் நாடாக இந்தியா திகழ்கிறது

ஐ.நா. வின் இந்தியப் பிரதிநிதி பெருமிதம்

இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு என்ற வகையில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதை எமது ஜனநாயக கோட்பாட்டின் தவிர்க்க முடியாத மத்திய புள்ளியாக விளங்குவதாக ஐ.நா. சபைக்கான இந்தியாவின் நிரந்தர உறுப்பினர் இந்திரமணி பாண்டே தெரிவித்துள்ளார். ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் 49வது மாநாட்டில் உரையாற்றிய அவர் இந்திய ஜனநாயக பண்புகள் பற்றி விளக்கிப் பேசினார்.

இந்திய அரசியலமைப்பு அடிப்படை மனித உரிமைகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது. பாராளுமன்றம், சுதந்திரமான நீதித்துறை, உறுதிமிக்க ஊடகத்துறை மற்றும்சிவில் சமூகம் என்பன ஒவ்வொரு குடிமகனின் மனித உரிமைகளையும் உறுதிசெய்வதாக உள்ளன. சிறுபான்மை சமூகங்களை உள்ளடக்கியதாக அனைத்து குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் உள்ளார்ந்த பொறிமுறைகளை அரசியலமைப்பு உள்ளடக்கியிருப்பதாக தமது உரையில் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா ஒரு ஜனநாயக, பல்லின, பல் மத, பல் கலாசார சமுதாயத்தை கொண்ட நாடு என்ற வகையில் ஐ.நா. சபையில் பல்லினத் தனமையும் நடுநிலைப் பாவமும் கொண்ட உறுப்பினராக விளங்குவதாகக் குறிப்பிட்ட அவர், கொவிட் பெருந்தொற்றின் போது மனிதாபிமான உதவிகளை இந்தியா ஆற்றியதாகவும் சொன்னார்.

"இந்தியாவின் சனத்தொகைக்கு பெருமளவு தடுப்பூசி மருந்து தேவைப்பட்டிருக்கும் சமயத்தில் இந்தியாவினால் 150க்கும் அதிகமான நாடுகளுக்கு தடுப்பூசிகளையும் அவசியமான உபகரணங்கள் மற்றும் மருந்துகளையும் அனுப்பி வைக்க முடிந்தது" என்று அவர் தன் உரையில் சுட்டிக் காட்டினார்.

# ஆப்கானுக்கு 50 ஆயிரம் மெட்ரிக் தொன் கோதுமை இந்தியா அன்பளிப்பு




ஆப்கானிஸ்தானுக்கு ஐம்பதாயிரம் மெட்ரிக் தொன் கோதுமையை மனிதாபிமான உதவியாக அனுப்பி வைக்கும் இந்தியாவின் தீர்மானத்தின் பிரகாரம் மூன்றாவது கட்டமாக இரண்டாயிரம் மெட்ரிக் தொன் கோதுமை ஜலலாபாத்துக்கு கடந்த செவ்வாயன்று அனுப்பி வைக்கப்பட்டது. வாகா எல்லை வழியாக பாகிஸ்தானுக்குள் சென்ற 40 டிரக் வண்டிகள் ஜலலாபாத் நோக்கிச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை விடுத்த வேண்டுகோளையடுத்தே ஐம்பதாயிரம் மெட்ரிக் தொன் கோதுமையை கட்டம் கட்டமாக அனுப்பி வைக்க இந்திய அரசு தீர்மானித்தது. முதல் கட்டமாக 2,500 மெட்ரிக் தொன் கோதுமை கடந்த பெப்ரவரி 26ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது என்றும் 50 டிரக் வண்டிகள் கோதுமையை பாகிஸ்தான் வழியாக எடுத்துச் சென்றதாகவும் இந்திய கிளை சுங்க ஆணையாளர் பல்பீர் சிங் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டதால் அந்நாட்டில் உணவுப் பொருட்களுக்கும் மருத்துவ பொருட்கள், உபகரணங்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. பெருமளவிலான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். இதையடுத்தே ஐ.நா. சபை மனிதாபிமான உதவிகள் அவசியப்படுவதாக கோரிக்கை விடுத்தது.

இந்தியா ஏற்கனவே ஐந்து இலட்சம் டோஸ் கோவெக்சின் ஊசி மருந்தையும் 13 தொன் உயிர் காக்கும் மருந்துகளையும் 500 தொகுதி குளிர் கால ஆடைகளையும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக ஆப்கானுக்கு அனுப்பி வைத்துள்ளது.

## காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**காணி அமைச்சின் இலக்கம் :- 4-3/10/2019-MV/464-A**

**எனது குறிப்பு இல :- DIVH/LAND/NWPC/307/1(14/2021)**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்டஈட்டு பரீட்சைகள் 2008.03.22ஆம் திகதி ஏஹட்டுவெவ பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.02.22 மற்றும் 2268/45 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும். அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். என்பதை நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

| | |
|---|---|
| **மாவட்டம்** | குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | எஹட்டுவெவ |
| கிராம சேவகர் பிரிவு | 122 - கதுருவெவ |
| கிராமத்தின் பெயர் | கலபிட்டவெல |
| ஆரம்ப வரைபட இல. | 3943, பிற்சேர்க்கை இல. 2, தாள் இலக்கம் 2 |
| துண்டு இல. | 19 தொடக்கம் 22 வரை 25, 27, 30, 31, 34 தொடக்கம் 36 வரை, 38, 39, 42, 43, 44, 47 தொடக்கம் 50 வரை 53, 54, 55, 57, 58, 59, 61 வரை |
| முழு காணியின் விஸ்தீரணம் | ஹெக்டயார் 3.6783 |

**ரேணுக்கா பி. விஜேயரூப**
**பிரதேச செயலாளர்,**
**எஹட்டுவெவ,**

**பிரதேச செயலாளர், காரியாலயம், எஹட்டுவெவ.**
**திகதி:** 2022.03.10

# இறுதிக் கணக்குத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வு

## லங்கா சலுசல லிமிட்டட்

எமது நிறுவனத்தினால், மேற்படி கருமத்தைத் துரிதமாக முடிவுறுத்துவதற்காக, உரித்தான துறையில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் உள்ள கணக்கியல் மற்றும் கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து (Accounting and Audit Firms) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அ. கணக்கியல் நடவடிக்கைகள்:**

- 2009/2010 முதல் 2014 / 2015 வரை வரைவுகள், இறுதிக் கணக்குகள், அனைத்து வகையிலும் பொருந்தக்கூடியதாகத் தயாரித்தல்.
- 2015/2016 மற்றும் 2016/2017ஆம் ஆண்டுகளின் அடிப்படைக்குறிப்புப் புத்தகங்களைத் தயாரித்து கணக்குகளைத் தயாரித்தல்.
- 2017/2018 முதல் 2020/2021 ஆண்டு வரை இறுதிக் கணக்குகள், பொருந்தக்கூடியதாகத் தயாரித்தல்.

**ஆ. கணக்காய்வு நடவடிக்கைகள்:**

- 2009/ 2010 கணக்கு ஆண்டு முதல் 2015/ 2016 கணக்கு ஆண்டு வரை

இதற்கான விண்ணப்பங்கள் 2022.03.25 அன்று அல்லது அதற்கு முன்னர், lankasalusalalimited@gmail.com என்ற இணைய மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வ/ப. இலங்கை சலுசல, இல. 93, ஜாவத்த வீதி. கொழும்பு 05 இல் உள்ள பிரதான அலுவலகத்திற்குக் கிடைக்கச் செய்யவும்.

**விசாரணைகள்:**
மஹேஷ் ஏக்கநாயக்க தொ.பே. 0112586732
கணக்காளர் 0714801713

**தலைவர்**
**வ/ப இலங்கை சலுசல**

---

afc

# தங்கக் கடன் சேவை
# தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.12.2021 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 24.03.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

## தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, சங்கானை, சாவகச்சேரி, கடவத்தை, கிளிநொச்சி, கிரிபத்கொடை, கொஹவல, மாலபே, மன்னார, நீர்கொழும்பு, புதுக்குடியிருப்பு, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி

## ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதிஇராஜகிரிய
24.03.2022

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
செபைாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

---

## மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

இல-38, நீர்கொழும்பு வீதி, மினுவங்கொட எனுமிடத்தில் அமைந்துள்ள விக்ரமசிங்ஹ அடகு நிலையத்தில் 2018.07.26 ஆம் திகதியின் பின்னர் அடகு வைக்கப்பட்ட 01 வருடம் பூர்த்தியாகி உள்ள மீட்கப்படாத அடகுப் பொருட்கள் 2022.04.25 மு.ப.10.00 முதல் இவ்விடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**W.A.J.T.விக்ரமசிங்ஹ**
**முகாமைத்துவ உரிமையாளர்**

---

## மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

இலக்கம் 38, நீர்கொழும்பு வீதி, மினுவங்கொட என்ற முகவரியிலமைந்துள்ள விக்ரமசிங்ஹ அடகு மத்திய நிலையத்தில் 2018.07.26 இன் பின்னர் அடகு வைத்து ஒரு வருடம் பூரணப்படுத்தியுள்ள, மீட்டுக் கொள்ளப்படாத அடகு நகைகள் 2022.04.25 அன்று மு.ப. 10.00 இற்கு இந்நிலையத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**W.A.J.T. விக்ரமசிங்ஹ,**
**முகாமைத்துவ உரிமையாளர்**

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**ஸ்ரீபோஷா லங்கா ஃபுட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம் : **PV 00231031**
பதிவு முகவரி:
இல. 234/B/6, நாரங்கஸ் கும்புற வீதி, பல்லேமுல்ல, ஹல்லொழுவ.

**T.P.M.C.H. குமார**
**பணிப்பாளர்**

---

# பகிரங்க அறிவித்தல்
## பெயர் மாற்றம்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8ஆவது பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய, மவுன்டெய்ன் ஹோக் எக்ஸ்பிரஸ் (பிரைவட்) லிமிட்டட தனது பெயரை அட்வாண்டிஸ் எக்ஸ்பிரஸ் (பீவீடீ) எல்டீடி என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பதை 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவுக்கேற்ப இத்தால் அறிவிக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| முன்னைய கம்பனியின் பெயர் | : | மவுன்டெய்ன் ஹோக் எக்ஸ்பிரஸ் (பிரைவட்) லிமிட்டட் |
| கம்பனி இலக்கம் | : | PV 454 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : | இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| **புதிய கம்பனியின் பெயர்** | : | **அட்வாண்டிஸ் எக்ஸ்பிரஸ் (பீவீடீ) எல்டீடி** |

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2022 மார்ச் 16

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட்
செயலாளர்கள்

---

மத்திய மாகாண சபை

# விலைமனு அழைத்தல்

## நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் – 2022 மற்றும் உலர் மற்றும் பச்சை ஔடதங்களை கொள்வனவு செய்தல் – 2022

**இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டு மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் அமைச்சு**

01. மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் தகைமைபெற்றுள்ள அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022 ஆம் ஆண்டிற்கான நிர்மாணங்கள், பராமரிப்புகள் மற்றும் வழங்கல்களிற்காக விலைமனுக்கோரப்படுகின்றது.

02. நிர்மாணங்கள்/பராமரித்தல்களிற்காக 2019.05.18ஆம் திகதிய அரச நிதிச்சுற்றறிக்கை 4/2016(ii) இன் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தேச செலவினம் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவான ஒப்பந்தங்களிற்காக CIDA பதிவு மற்றும் பிராந்தியப் பதிவு செய்யப்பெற்றுள்ள விலைமனுதாரர்களுக்கு 5% இற்கான முன்னுரிமை கவன்திற் கொள்ளப்படும்.

03. மீளளிக்கப்படாத படிவக்கட்டணத்தை மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி உதவியாளருக்குக் காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை திணைக்களத்தின் கணக்குப்பிரிவில் சமர்ப்பித்து 2022.03.16 முதல் 2022.04.06 வரை, வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை இதற்கான விலைமனுப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக, திணைக்களத்தினால் வழங்கப்படும் படிவங்களை மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

04. உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், 2022.04.07 அன்று மு.ப.11.00 இற்கு (11.00 மணிக்கு) அல்லது அதற்கு முன்னர், குண்டசாலை, பல்லேகெலே இலுள்ள மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின், திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவருக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திலுள்ள பெறுகைபெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

05. அனைத்து விலைமனுக்களும் இரண்டு பிரதிகளாகத் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி தனித்தனி உறைகளில் சேர்த்து பெயர் குறிப்பிட்டு முத்திரையிட்டு அவ்விரு உறைகளையும் ஒருறையில் சேர்த்து முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும். அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் செயற்றிட்ட இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

06. விலைமனுக்களின் செல்லுபடிக்காலம் 2022.06.23 ஆம் திகதி வரையாகுதல் வேண்டும்.

07. இலங்கை மத்திய வங்கி அனுமதித்துள்ள வணிக வங்கியொன்றிலிருந்து, இலங்கை காப்புறுதிச் சபை அனுமதித்துள்ள காப்புறுதி நிறுவனமொன்றிலிருந்து, நிர்மாணத்துறை பாதுகாப்பு நிதியத்திற்கு மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் பெயரில் வழங்கப்பட்ட கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெறுமானமுள்ள விலைமனுப்பிணையமொன்று, அனைத்து விலைமனுக்களுடனும் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், விலைமனுப்பிணையத்தின் செல்லபடிக்காலம் 2022.07.21 வரையாகுதல் வேண்டும். விலைமனுப்பிணையமானது, காசாகச் செலுத்தப்படுவதாயின், மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு இலங்கையில் செல்லுபடியாகும் பணத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி, விலைமனுப் பிணையமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

08. இவ்விலைமனு தொடர்பான முன்னோடிப் பெறுகைக் கூட்டம், 2022.03.30 அன்று மு.ப.10.30 இற்கு மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தில் நடத்தப்படும்.

09. அனைத்து விலைமனுக்களும், தொழில்நுட்ப ஆய்வுகுழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.

10. விலைமனுக் கோரலுக்கான விபரங்களை குண்டசாலை பல்லேகெலயிலுள்ள மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் கணக்காளரிடம் (தொ.பே.இல.081-2423144) மூலம் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி ஆவணங்களை மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் கணக்குப்பிரிவில் வார வேலை நாட்களில் 12.00 - 13.00 மணிக்கு இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

| செயற்றிட்ட இலக்கம் | செயற்றிட்டம் | பதிவு | படிவக் கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை | | உத்தேச தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | CIDA | ரூபா | வங்கிப் பிணைய மொன்றாக ரூபா | காசாக ரூபா | ரூபா |
| 01 | Renovation of ward 1,2,3 including Ambufance Garage at Ayurveda Hospital, pallekele | C7 & C6 | 3,000.00 | 161,500.00 | 81,000.00 | 8,053,742.29 |
| 02 | Renovation of Mortuary at Ayurveda Hospital, pallekele | C9 & C8 | 1,500.00 | 14,000.00 | 7,000.00 | 687,969.10 |
| 03 | Renovation of Building at Ayurvedic Central Dispensary - yatawara | C8 & C7 | 2,000.00 | 84,000.00 | 42,000.00 | 4,181,103.30 |
| 04 | Construction of Chain Link Mesh Fence & Gate at Delgaslanda Ayurvedic Central Dispenser | C8 & C7 | 2,000.00 | 40,200.00 | 20,100.00 | 2,001,206.00 |
| 05 | Repair to Ayurvedha Central Dispensary & Ayurvedha Quarters at Adikarigama. | C9 & C8 | 1,500.00 | 40,000.00 | 20,000.00 | 1,965,383.50 |

02. உலர் மற்றும் பச்சை ஔடதங்களை கொள்வனவு செய்தல் - 2022 இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டு உலர் மற்றும் பச்சை ஔடதங்களிற்காக விலைமனுச் சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் ஒவ்வொரு ஔடதங்களிற்காகவும் மாதிரிகளை தனித்தனியாக முத்திரையிட்டு, 2022.04.07 அன்று மு.ப.08.30 முதல் 10.30 வரை மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் பட்டியல் ஒன்றுடன் உரியவாறு ஒப்படைத்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | வழங்கல் | விலைமனுப் படிவக் கட்டணம் | விலைமனுப் பிணையத்தின் பெறுமானம் | |
|---|---|---|---|---|
| | | | வங்கிப் பிணையமொன்றெனின் ரூபா | காசாக ரூபா |
| 01 | உலர் மற்றும் பச்சை ஔடதங்களைக் கொள்வனவு செய்தல் - 2022 இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டு | 2,000.00 | விலைமனுத் தொகையின் 2% | விலைமனுத் தொகையின் 1% |

**தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு,**
**மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்,**
**பல்லேகெலே - குண்டசாலை.**

---

# கொழும்பு மாநகர சபை

**கொழும்பு மாநகர சபையின் மூலம் 2021.9.17 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இல.: 2245/30 இல் பிரசுரிக்கப்பட்டது.**

**(1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தரப்படுத்தப்பட்ட துணை விதிச்சட்டம்) 1989.01.20 ஆம் திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி இல. 541/17 துணை விதிச்சட்டத்தின் பகுதி V இன் பிரகாரமான கேள்வி அறிவித்தல்.**

## கேள்வி / விலைமனுவிற்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் சேவைகள் மற்றும் வேலைகளுக்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

| தொடர் இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணை / பிணைமுறியின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01. | CPD/20/2085/2021 | வீல்லோடர் மெசீன் ஒன்றுக்கான டயர் மற்றும் டியூப்களை வழங்குதல் | வழங்குநர்கள் / சேவை வழங்குநர்கள் இவ்வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவம் மற்றும் வியாபார பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும். | ரூ. 2160.00 | 20,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 02. | CPD/20/0762/2022 | பற்றரிகளை வழங்குதல் | | ரூ. 2160.00 | 30,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 03. | CPD/20/2607/2021 | வாகன வளிச்சீராக்கி மற்றும் கட்டிட வளிச்சீராக்கி உதிரிப்பாகங்களை வழங்குதல் | | ரூ. 2160.00 | 50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 04. | CPD/20/297/2022 | மோட்டார் உதிரிப் பாகங்களை வழங்குதல் | | ரூ. 2160.00 | 50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 05. | CPD/20/3184/2021 | டயர், டியூப், மடல்கள் மற்றும் பற்றிரிகளை வழங்குதல் | | ரூ. 2160.00 | 50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 06. | CPD/06/3275/2021 | சிவப்பு நிறமி (Red Pigment) மற்றும் கறுப்புநிறமி (Black Pigment) வழங்கி விநியோகித்தல் | | ரூ. 5400.00 | 100,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 07. | CPD/09/3385/2021 | பெயின்ட் மற்றும் பெயின்ட் சார்ந்த உருப்படிகளை வழங்கல் | | ரூ. 5400.00 | 100,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 08. | CPD/09/3248/2021 | உராய்வு நீக்கி (Lubricants) பொருட்களை வழங்குதல் | | ரூ. 5400.00 | 100,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 09. | CPD/18/2928/2021 | டைல் மற்றும் செரமிக் இணைப்புக்களை வழங்கல் | | ரூ. 5400.00 | 150,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 10. | CPD/06/3184/2022 | பம்பிங் நிலைய உருப்படிகள் - DI சாக்கடை பைப், வளைவுகள் VJ கப்ளிங்குகள், பழுது பார்த்தல் Clamp போன்றவற்றை வழங்குதல். | | ரூ. 5400.00 | 350,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |

கேள்வி ஆவணம் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) ஆகியவற்றை இரு முறைமைகளினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**முறைமை - 01 – கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தல்.**

i. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி/ விலைமனுக்கோரல் கட்டணத்தை பின்வரும் முறைமைகளில் செலுத்தலாம்.
   அ) **167-1-001-6-3169425** என்ற கணக்கு இலக்கத்தை கொண்டுள்ள நகர மண்டப கிளைக்கு வரவு வைக்குமாறு எந்த மக்கள் வங்கி கிளையிலிருந்தும் அனுப்புதல்.
   ஆ) வார நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் பின்வரும் கொழும்பு நகர எல்லைக்குளுள்ள மாநகர இடப்பரப்புக்களிலுள்ள பணக்கொடுப்பனவு கருமபீடங்கள்.

   **மாவட்ட அலுவலகம் 4**
   **இல. 147, ஹைலெவல் வீதி, கிருளப்பன**
   **கொழும்பு-06.**

   **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு**
   **மாளிகாகந்த**
   **கொழும்பு-10.**

ii. மூலப்பிரதி பற்றுச்சீட்டு/ வரவுத் துண்டு ஆகியவற்றை கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைப்பது கட்டாயமானதாகும்.

**முறைமை 02 – நகர மண்டப இடப்பரப்பிலிருந்து சேகரித்தல்.**

அ) 2022.04.04 ஆம் திகதியன்று வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப இடப்பரப்பிலுள்ள சிறாப்பர்களின் கருமபீடங்களில் ஒவ்வொரு கேள்விக்கும்/விலைமனுக்கோரலுக்கும் கேள்வி அறிவித்தலில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளரின் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு அலுவலகத்திலிருந்து கேள்வி/ விலைமனுக் கோரல் ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022 ஏப்ரல் 04ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட மாட்டாது/ வழங்கப்பட மாட்டாது.

இ. கேள்விகளை/விலைமனுப்பிணை ஆகியவற்றை மூடும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு நிபந்தனையற்ற உடனடியாக பெறக்கூடிய விலைமனு உத்தரவாதம்/ விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணை ஆகியன 2022.09.01 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுவானது 2022.08.02 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஈ. கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணம் ஆகியனவற்றின் மூலப்பிரதியானது உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு நகல்பிரதியுடன் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07, மாநகர மண்டபம், மாநகர சபை செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

உ கேள்வி/ விலைமனுவானது 2022 ஏப்ரல் 05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படுவதுடன் மூடும் நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் கேள்விகள்/விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள்/விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறையாக பிரகடனப்படுத்தப்படின், கேள்விகள்/ விலைமனுக்கள் அடுத்த வேலை நாளன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்/ விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறத்தலின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். 0112-686389, 0112-686369 மற்றும் 0112-662329 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளலாம்.

ஊ கேள்விதாரர்/ விலைமனுதாரர் ஆகியோரின் கேள்விகள்/ விலைமனுக்கள் 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டதாக இருப்பின், 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவின் பின்னர் பிசிஏ (3) படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரொஷனி திசாநாயக்க – சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# சாவகச்சேரி மின் மயான அபிவிருத்திக்குழு அங்கஜன் எம்.பியுடன் சந்திப்பு

சாவகச்சேரி விசேட நிருபர்



சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மின் மயான அபிவிருத்திக் குழு நேற்றுமுன்தினம் 14/03 திங்கட்கிழமை பிற்பகல் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தில் வைத்து சந்தித்திருந்தனர்.

தென்மராட்சி சர்வதேச நிறுவனங்களின் ஒன்றியத்தின் பங்களிப்புடன் சாவகச்சேரியில் நிறுவவுள்ள மின் மயானத்திற்கு நிதி உதவி கோரும் முகமாக இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது. தகன மின் பொறி நிர்மாணிக்க 13 மில்லியன் ரூபாய் நிதி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மின்மயான அபிவிருத்திக் குழுவினர் புலம்பெயர் உறவுகள் உள்ளிட்ட பலரதும் உதவிகளையும் பெற்று மின் மயானம் நிறுவத் தீர்மானித்துள்ளனர். அதன் ஓர் அங்கமாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருடனான சந்திப்பு இடம்பெற்றிருந்தது.


இதன்போது உரிய அமைச்சுடன் பேசி உரிய காலத்தில் மின் மயானத்திற்கான உதவித்திட்டத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக அங்கஜன் இராமநாதன் உறுதியளித்திருந்தார்.

அத்துடன் மின் மயானம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் அமையப்பெறுகின்ற போதிலும் ஒட்டுமொத்த தென்மராட்சி மக்களும் அதன் பயனாளிகள் என்ற அடிப்படையில் சாவகச்சேரி பிரதேசசபையும் மின் மயானத்திற்கான நிதிப் பங்களிப்பை வழங்குவதற்கான அனுமதியையும் ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மூலமாக பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் அங்கஜன் எம்.பி மேலும் தெரிவித்திருந்தார்.

இச்சந்திப்பில் கண்ணாடிப்பிட்டி மின் மயான அபிவிருத்திக் குழுவில் அங்கம் வகிக்கும் சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் சிவபாலன்,சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் மயூரன், சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி, சட்டத்தரணி திசாந்தினி, சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் மினேஸ், லயன்ஸ் கழக பிரதிநிதி பிரணவ ராஜா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்


# பாவற்குளம் படிவம் –3 கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறு











வவுனியா விசேட நிருபர்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா செட்டிக்குளம் கோட்டத்தில் இம்முறையும் பாவற்குளம் படிவம்3 கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் வரலாற்று சாதனை படைத்துள்ளது.

2021ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 17 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்ததுடன், 07 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

செட்டிகுள கோட்டத்தில் கூடிய தொகை வெட்டுபுள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட பாடசாலை இதுவாகும். அந்தவகையில், ஜ.சன்சிகன் 166 புள்ளிகளையும், வ.சபிதா 165 புள்ளிகளையும், ம.றெஜினோல்ட் 163 புள்ளிகளையும், ஈ.கொன்ஸ்ரன் 162 புள்ளிகளையும், ர.தரணிகா 161 புள்ளிகளையும், கி.பவிசனா 155 புள்ளிகளையும், ஜோ.ஜொய்சியா 151 புள்ளிகளையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடமும் வெட்டு புள்ளிகளுக்கு மேல் 05 மாணவர்கள் சித்தியடைந்து செட்டிகுள கோட்டத்தில் அதிக மாணவர்கள் சித்தி பெற்ற பாடசாலையாக திகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.தமிழ்ச்சங்கம் நடாத்தும் சங்கப்பேழை நூல்வெளியீடு

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடாத்தும் சங்கப்பேழை நூல்வெளியீடு, உலகத் தாய்மொழிநாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற வடமாகாண மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு என்பன எதிர்வரும் 19.03.2022 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்து கொள்வார். நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் தமிழ்மொழிநாள் பேருரையை கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சந்திரசேகரமும் அவருக்கான அறிமுகவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் சங்கப்பேழை நூல் வெளியீட்டுரையை நூலின் பதிப்பாசிரியர் லோ. துசிகரனும் நூலாய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் ஆற்றுவர். நன்றியுரையை சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் கு. பாலசண்முகனும் நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலை சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வராவும் மேற்கொள்ளவுள்ளதாக தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்காவிட்டால் ஆளுநர் செயலகம், கல்வி அமைச்சை முடக்குவோம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கோப்பாய் குறூப் நிருபர்

வடக்கு மாகாணத்தில் வெளிமாவட்டங்களில் ஏழு வருடங்களுக்கு அதிகமாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு உரிய முறையில் இடமாற்றம் வழங்காவிட்டால் வடமாகாண ஆளுநர் செயலகம், கல்வி அமைச்சையும் முடக்கி போராட்டம் நடத்துவோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று (15) செவ்வாய்க்கிழமை ஊ ட க அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ஆசிரியர் இடமாற்றங்களை முறையற்ற விதத்தில் கையாண்டு வருகிறார்.

ஆசிரியர் இடமாற்றங்களில் தமக்கு வேண்டியவர்களை காப்பாற்றும் முகமாக மேன்முறையீடு என்ற போர்வையில் பலர் வெளி மாவட்டங்களுக்கு இதுவரை செல்லவில்லை.

வடக்கு மாகாணத்தின் கல்வி பணிப்பாளர் 7 வருடங்களை தாண்டியும் அதே பதவியில் இருக்கின்ற நிலையில் வடக்கு கல்வியை சரியான முறையில் அவரால் கொண்டு செல்ல முடியவில்லை.

வடக்கு மாகாணத்தில் தொண்டராசிரியர் என்ற போர்வையில் ஒருநாள் கூட பாடசாலையில் கடமையாற்றாத ஆசிரியர் ஒருவரை ஆசிரியர் நியமனத்தில் உள்வாங்கியுள்ளனர்.

இவர் வேறு யாரும் அல்ல வடக்கு கல்வி அமைச்சை வழிநடத்தும் தொழிற்சங்கம் ஒன்றின் செயற்பாட்டாளரின் அனுசரணையில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர். வடக்கு கல்வி அமைச்சு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளை பல வருடங்களாக இலங்கை ஆசிரியர் சங்கம் சுமத்தி வந்தது.

பரமனே குற்றச்சாட்டுகளை சுமத்துவது மட்டுமல்லாது ஆதாரங்களுடன் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜவுக்கு வழங்கினோம்.

தலையிடிக்கு தலையணையை மாற்றியது போல் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரை ஆளுநர் மாற்றினார்.

கல்வி அமைச்சின் செயலாளரை மாற்றினால் மட்டும் வடக்கு கல்வியமைச்சின் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது. வடக்கு கல்வி அமைச்சில் இடம்பெற்ற நிதி நிர்வாக மோசடிகளை ஒரு சுயாதீன விசாரணை ஆணைக்குழு முன் விசாரிக்க வேண்டும் என ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தோம்.

ஆனால் மூன்று மாதங்கள் கடந்தும் இதுவரை விசாரணை குழு நியமிக்கப்படவில்லை.

வடக்கு கல்வி அமைச்சின் அரசியல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் இடம்பெற்ற நிலையில் தற்போதய ஆளுநரும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அரசியல் நிகழ்ச்சியில் இயங்குகிறாரா? என்ற சந்தேகம் எழுகின்றது.

மேலும் தற்போது 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆசிரியர் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்படாத நிலையில் ஏப்ரல் மாதம் இடமாற்றத்தை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

பல வருடங்களாக வெளி மாவட்டங்களில் இன்னல்களுக்கு முகம் கொடுத்துவரும் ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர்.

வடக்கு கல்வியமைச்சர் இருக்கும் ஒரு சிலர் தமது சொந்த நலன்களுக்காக ஒரு பகுதியினரின் இடமாற்றத்தை புறக்கணித்து வருவதை இனியும் நாம் வேடிக்கை பார்க்க முடியாது.

ஆகவே வடமாகாண ஆளுநர் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தவறின் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை ஒன்றிணைத்து ஆளுநர் செயலகம் மற்றும் வடக்கு கல்வி அமைச்சை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் என எச்சரிக்கை விடுத்தார்.

# வைத்தியராக வந்து மக்களுக்கு சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம்

## மாணவன் கே.எபிஸ்டனி

மன்னார் குறூப் நிருபர்



ஒரு வைத்தியராக வந்து மக்களுக்கு சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம் என தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 188 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றுசித்தியடைந்த மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் கேதீஸ்வரலிங்கம் எபிஸ்டனி தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 188 புள்ளிகளைப் பெற்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் கேதீஸ்வர லிங்கம் எபிஸ்டனி மாவட்டத்தின் முதல் நிலையைப் பெற்றுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பரீட்சைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளை செல்வன் கே.எபிஸ்டனி பெற்றுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

நான் மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு என்னை தினமும் ஊக்கப்படுத்தி எனக்கு பெரிதும் உதவியாக இருந்த பெற்றோருக்கு முதலில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு எனது கற்றல் செயற்பாடுகளில் முற்று முழுதாக எனக்கு கற்பித்து எனக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி வழிப்படுத்திய எனது வகுப்பாசிரியர் இ.ராகுலன் ஆசிரியருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு எனக்கும் ஏனைய மாணவர்களுக்கும் நல்ல ஊக்கத்தையும் ஆலோசனைகளையும் வழங்கிய எனது பாடசாலை அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ. றெஜினோல்ட் மற்றும் பிரதி அதிபர், பகுதித்தலைவர் மற்றும் ஏனைய அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் நல்ல மருத்துவராக வந்து சேவையாற்ற வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். அந்த வகையில் நான் தொடர்ந்து சிறப்பாக கல்வி கற்று எனது பெற்றோருக்கும் பாடசாலைக்கும் புகழைத் தேடித் தருவேன் என மாணவன் எபிஸ்டனி தெரிவித்தார்.

இதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் முஹமட் அமர் 185 புள்ளிகளை பெற்று மன்னார் மாவட்டத்தில் 2 ஆவது இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் பட்டபகலில் வீடு புகுந்து திருட்டு: பெண் மீதும் தாக்குதல்

வவுனியா விசேட நிருபர்



வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு இடம்பெற்றுள்ளதுடன், வீட்டில் நின்ற பெண் ஒருவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் வசித்து வந்த குடும்பத்தினர் வேலைக்காக வெளியில் சென்றிருந்ததுடன், ஒரு பிள்ளை பாடசாலைக்கும், மற்றைய பிள்ளை உறவினர் வீட்டிற்கும் சென்றிருந்தனர்.

உறவினர் வீட்டிற்கு சென்ற பெண் பிள்ளை பகல் 11 மணியளவில் தனது வீட்டிற்கு வந்து அறையில் இருந்த போது ,சிறிது நேரத்தில் வீடு புகுந்த திருடர்கள், வீட்டில் இருந்த அலுமாரி, சாமி அறை மற்றும் ஏனைய பகுதிகளில் சோதனை செய்ததுடன், பெண் பிள்ளையை தாக்கி விட்டு அவர் அணிந்திருந்த சங்கிலி மற்றும் மோதிரம் என்பவற்றையும் அறுத்துச் சென்றுள்ளனர். இதன் போது 2 பவுண் நகை திருடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பெண் பிள்ளை அயலவர்களை அழைத்ததுடன், தமது பெற்றோருக்கும் தெரியப்படுத்தியிருந்தார். இது தொடர்பில் வவுனியா பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா உக்குளாங்குளம் மற்றும் பண்டாரிக்குளம் பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக பல்வேறு பகுதிகளில் பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தீயணைப்புப் படையின் உதவியுடன் குளவிக் கூடு அழிப்பு



சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம்தவசிக்குளம் பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் பொது இடத்தில் காணப்பட்ட குளவிக்கூடு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ் மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினரால் எரித்து அழிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேசசபையின் உபதவிசாளர் செ.மயூரனின் முயற்சியால் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்பட்ட பம்பர் குளவிக்கூடு அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "வெற்றி எனக்கே" நூல் வெளியீடு

நெடுங்கேணி முன்னாள் பிரதேச செயலாளர் கதிர் பரந்தாமனின் வெற்றி எனக்கே நூல் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா,வைரவபுளியங்குளம் Vores கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக வவுனியா அரச அதிபர் P.A.சரத்சந்திரவும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு நீர் வழங்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் க.தெய்வேந்தரம்,வடமாகாணசபை விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.வெளியீட்டுரையினை இன்தமிழ் இனியன் s.s.வாசனும் நூல் நயவுரையினை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசாவும் கருத்துரையினை கவிஞர் சு.ஜெயச்சந்திரனும் நிகழ்த்துவர்.

# வவுனியா மாவட்ட மட்டத்தில் அரவிந்தன் அபிரான் முதலிடம்

ஓமந்தை விஷேட நிருபர்



ஐந்தாம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவன் அரவிந்தன் அபிரான் வவுனியா மாவட்ட மட்டத்தில் முதல்நிலை சித்தியினை பெற்றுள்ளார்.

2021 ஆம் ஆண்டிற்கான தரம் ஐந்து புலமைபரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளிவந்திருந்தது. அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியால மாணவன் அரவிந்தன் அபிரான் 192 புள்ளிகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

# சர்வதேச செய்திகள்

## சீனாவில் மோசமாகும் கொவிட் சம்பவங்கள்

சீனாவில் கொரோனா தொற்று சம்பவங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை 5,280 ஆக உச்சத்தை தொட்டுள்ளது. இது அந்த நாட்டில் பெருந்தொற்று ஆரம்பித்தது தொடக்கம் பதிவான அதிகபட்ச தினசரி தொற்றாகும்.

வடகிழக்கு மாகாணமான ஜிலின் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது. அங்கு 3,000க்கும் அதிகமான தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக தேசிய சுகாதார அணையம் குறிப்பிட்டுள்ளது.

அந்த மாகாணத்தில் உள்ள குறைந்தது 5 நகரங்கள் இம்மாதத் ஆரம்பத்தில் இருந்து மூடப்பட்டுள்ளன. அங்கு நோய்ப்பரவலைக் கையாள முறையான செயல்முறைகள் இல்லாததை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



தொழில்நுட்ப மையமான ஷென்ஸென் உட்பட, சீனாவில் 10 நகரங்கள் முடக்கப்பட்டுள்ளன. சுமார் 17 மில்லியன் பேர் வீடுகளில் தங்கியிருக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சீனாவின் மொத்தம் 13 நகரங்கள் முடக்கப்பட்டிருப்பதோடு மேலும் பல நகரங்கள் பகுதி அளவு முடக்கப்பட்டுள்ளன.

2019 கடைசியில் மத்திய நகரான வுஹானில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தொற்றை கட்டுப்படுத்த சீனா பொது முடக்கம் போன்ற கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எனினும் நேற்று தொடர்ந்து ஆறாவது நாளாகவும் புதிய தொற்று சம்பவங்கள் 1,000ஐ தாண்டியுள்ளது.

## ரஷ்யாவுடன் சர்வதேச விண்வெளி பணிகளைத் தொடர நாசா உறுதி

உக்ரைன் போர் பதற்றம் சர்வதேச விண்வெளி நிலைய செயற்பாடு மற்றும் ரஷ்ய விண்கலத்தில் அமெரிக்க விண்வெளி வீரர் பூமிக்கு திரும்புவதில் எந்தத் தாக்கமும் செலுத்தாது என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா தெரிவித்துள்ளது.



ரஷ்யாவின் சொயுஸ் விண்கலத்தின் மூலம் அமெரிக்காவின் மார்க் வென்டே ஹெய் 355 நாட்கள் விண்வெளியில் இருந்த நிலையில் வரும் மார்ச் 30 ஆம் திகதி பூமிக்கு திரும்பவுள்ளார்.

எனினும் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான பதற்றம் அவர் பூமிக்குத் திரும்புவதில் சந்தேகத்தை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் நாசாவின் சர்வதேச விண்வெளி நிலையத் திட்டத்தின் முகாமையாளர்ஜெவேல்மொடெல்பானோ செய்தியாளர்களிடம் கூறும்போது, 'சொயுஸ் மூலம் மார்க் வீடு திரும்புவார் என்பதை என்னால் உறுதி செய்ய முடியும்' என்றார். 'ரஷ்ய சகாக்களுடன் நாம் தொடர்புகொண்டோம். இது பற்றி எந்த பிரச்சினையும் இல்லை' என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்கத்திய நாடுகளின் தடைகள் சர்வதேச விண்வெளி நிலையத்தின் செயற்பாடுகளில் இடையூறை ஏற்படுத்தி அது உடைந்து விழுவதற்கு காரணமாகலாம் என்று ரஷ்ய விண்வெளி நிறுவனத்தின் தலைவர் ட்மிட்ரி ரொகோசின் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய தொலைக்காட்சியில் போரை எதிர்த்து கோசம்




ரஷ்யாவில் அதிகமானோர் பார்க்கும் இரவு நேர செய்தி ஒளிபரப்பின்போது, போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பிய ஊழியர் ஒருவர், 'போர் வேண்டாம்' என்று எழுதியிருந்த அட்டையை தூக்கிப் பிடித்துக் காட்டியுள்ளார்.

ரஷ்யாவின் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள ஒளிபரப்பு நிறுவனமான் 'சனல் வன்' செய்தி ஒளிபரப்பின்போது இது நடந்தது.

நிறுவனம் இரவு 9 மணிக்கு ஒளிபரப்பும் 'டைம்' எனும் செய்தி நிகழ்ச்சி சோவியட் காலம் முதல் ரஷ்யாவின் மில்லியன் கணக்கானோரால் பார்க்கப்படும் நிகழ்ச்சியாகும். குறிப்பாக வயது முதிர்ந்த ரஷ்யர்கள் பலர் நிகழ்ச்சி பார்ப்பதை வழக்கமாகக் கொண்டவர்கள்.

இந்த சம்பவம் கடுமையான பாதுகாப்பு அத்துமீறல் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒளிபரப்புக்கு இடையே அட்டையைப் பின்புறம் காட்டிய மரினா ஓவிசியான்னிகோவா என்ற ஊழியர் அங்கு செய்தியாளராகப் பணிபுரிபவர். தற்போது அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

செய்தி தொகுப்பாளர் யோகடரினா பெலரஸுடன் ரஷ்யாவின் உறவு குறித்த செய்தியை வாசிக்கத் தொடங்கியபோது, ஓவிசியான்னிகோவா, தீடீரென்று நுழைந்து, போர் வேண்டாம் என்று எழுதியிருந்த அட்டையைக் காட்டினார்.

அதில் மேலும் "இவர்களது பரப்புரையைக் கேட்காதீர்கள். இங்கு அவர்கள் பொய்யுரைக்கின்றனர்." என்று எழுதி "போருக்கு எதிரான ரஷ்யர்கள்" என்று கையெழுத்திடப்பட்டிருந்தது.

உடனடியாக ஒளிபரப்பு மாற்றப்பட்டது.

## உக்ரைனில் 9 மனிதாபிமான பாதைகளை திறக்க முயற்சி

### ரஷ்யா தொடர்ந்து தாக்குதல்

ரஷ்ய படையிடம் சிக்கி இருக்கும் பொது மக்களை வெளியேற்றுவதற்கு ஒன்பது மனிதாபிமான பாதைகளை திறப்பதற்கும் முற்றுகையில் இருக்கும் மரியுபோல் நகருக்கு மனிதாபிமான விநியோகங்களை வழங்குவதற்கும் உக்ரைன் திட்டமிட்டுள்ளது.

தொடர்ச்சியான குண்டு வீச்சுக்கு இலக்காகி வரும் முற்றுகை நகரான மரியுபோலில் ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் நிலவறைகள் மற்றும் கட்டட இடிபாடுகளில் அடைக்கலம் பெற்றுள்ளனர். அங்கு ஒரு வாரத்திற்கு மேலாக நீர் மற்றும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. நகரில் இருந்து வெளியேறும் முதல் வாகனத் தொடரணிக்கு கடந்த திங்கட்கிழமை அனுமதி அளிக்கப்பட்டது.



'முதல் இரண்டு மணி நேரத்தில் 160 கார்கள் வெளியேறின' என்று மரியுபோல் நகர சபை பிரதிநிதியான அன்ட்ரேய் ரெம்பெல் தெரிவித்துள்ளார்.

நகரில் ரஷ்ய ஷெல் வீச்சுகள் காரணமாக இதுவரை 2,300 மற்றும் 20,000க்கும் இடைப்பட்ட பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாக உள்ளூர் நிர்வாகம் குறிப்பிட்டபோதும் அதனை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று சூரியோதயத்திற்கு முன் தலைநகர் கியேவில் சக்திவாய்ந்த வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. கியேவில் இருக்கும் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாக அவசர சேவை பிரிவு தெரிவித்துள்ளது.

ஒடெசா, செர்னிஹிவ், செர்காசி மற்றும் ஸ்மைல் என பல பகுதிகளிலும் வான் தாக்குதல் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது.

வடக்கு உக்ரைனில் தொலைக்காட்சி கோபுரம் ஒன்றின் மீது கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட வான் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்திருப்பதாக வட பிராந்திய அரசின் ஆளுநர் லிட்டாலி கொவால் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான மற்றொரு சுற்று பேச்சுவார்த்தை நேற்று இடம்பெற்றது. இரு தரப்பும் கடந்த திங்கட்கிழமை வீடியோ வழியாக பேச்சுவார்த்தை நடத்தியபோதும் அதில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீதான படையெடுப்புக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உத்தரவிட்டது தொடக்கம் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் குண்டுவீச்சுகளில் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

## உய்குர் கலாசாரத்திற்கு எதிராக சீனாவில் திட்டம்



உய்குர்கள் தமது இன மற்றும் கலாசார அடையாளங்களை கைவிட்டு சீன கலாசாரத்தை ஊக்குவிக்கும் வகையில் கலாசார எழுச்சி சிந்தனை ஒன்றை உய்குர் அரச அதிகாரிகள் மற்றும் தனி நபர்களை பயன்படுத்தி சீன அரசு முன்னெடுத்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தேசிய மக்கள் கொங்கிரஸ் மற்றும் ஆலோசனைக் குழுவில் ஆற்றிய உரையை பிரதிபலிப்பதாக இது உள்ளது.

கலாசார எழுச்சி மற்றும் 'முழு சீன தேசத்தின் உணர்வு' சின்ஜியாங் உய்குர் சுயாட்சி பிராந்தியத்தில் உள்ள அரச ஆதரவு பிரதிநிதிகள் மூலம் ஊக்குவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

## இஸ்ரேலிய படையினரால் இரு பலஸ்தீனர் கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினர் இரு பலஸ்தீனர்களை சுட்டுக் கொன்றதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. போராளிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்களை கைது செய்யும் நடவடிக்கையின்போது மோதல் வெடித்ததாக இந்த சம்பவம் குறித்து இஸ்ரேல் எல்லைக்காவல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மேற்குக் கரை அகதி முகாம் ஒன்றில் இடம்பெற்ற இந்த நடவடிக்கையின்போது பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் செயலிழக்கச் செய்யப்பட்டனர் என்று இஸ்ரேல் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை நீதிக்கு புறம்பான கொலைகள் என்று பலஸ்தீன வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## பிரச்சினையை தீர்க்க சீனாவுக்கு அழுத்தம்

லடக்கில் ஏஞ்சிய பிரச்சினைக்குரிய புள்ளிகளை தீர்ப்பதற்கு சீனாவுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்துள்ளது. கோர்ப்ஸ் கொமாண்டர் மட்டத்திலான 15 ஆம் சுற்று பேச்சுவார்த்தையிலேயே இந்த அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 2020 மே–ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ இழுபறி தொடர்பில் தீர்வு ஒன்றுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்ததாக இதனுடன் தொடர்புபட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.என்.ஐ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் கிழக்கு லடக்கின் சுசுல் பகுதியில் இடம்பெற்றது



## புட்டினை 'ஒற்றைக்கு ஒற்றை' சண்டைக்கு அழைக்கும் மஸ்க்

உக்ரைனின் தலைவிதியை தீர்மானிப்பதற்கு தம்முடன் ஒற்றைக்கு ஒற்றை சண்டைக்கு வரும்படி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை உலகின் பெரும் செல்வந்தரான எலொன் மஸ்க் அழைத்துள்ளார்.



விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ்எக்ஸ நிறுவனரான மஸ்க் ட்விட்டரில் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் நாட்டின் படைகளை விடுத்துத் தமது பலத்தை நம்பி ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தம்முடன் சண்டையிடத் தயாரா என்று கேட்டுள்ளார்.

69 வயது புட்டினின் ட்விட்டர் கணக்குக்கு நேரடியாக அந்தத் தகவலை ரஷ்ய மொழியில் அனுப்பியுள்ளார் மஸ்க். ட்விட்டரில் மஸ்க்கிற்கு 77 மில்லியன் ரசிகர்கள் உள்ளனர். இது விளையாட்டு தானே என்று கேட்ட ரசிகர்களுக்குப் பதிலும் அளித்தார் மஸ்க்.

'மேற்கத்திய நாடுகளை இவ்வளவு தரக்குறைவாக நடத்தக்கூடிய புட்டின் இந்தச் சவாலை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர் செய்யமாட்டார்' என்றார் மஸ்க்.

போர் ஆரம்பித்தது முதலே மஸ்க் உக்ரைனுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வருகிறார். அவர் உக்ரைனின் வேண்டுகோளை ஏற்று ரஷ்ய ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தமது ஸ்டார்லிங்க் நிறுவனத்தின் இணையச் சேவையை வழங்க ஏற்பாடு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## முகமூடி கொலையாளியை தேடி பொலிஸார் வேட்டை

அமெரிக்காவின் நியுயோர்க் மற்றும் வொசிங்டன் டி.சி வீதிகளில் உறங்கும் வீடற்றவர்கள் மீது முகமூடி அணிந்த துப்பாக்கிதாரி ஒருவர் தாக்குதல் நடத்திய ஐந்து சம்பவங்கள் கடந்த ஒன்பது நாட்களுக்குள் பதிவாகியுள்ளன.

ஒவ்வொரு சம்பவங்களும் ஒரே மாதிரியாக இருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டிருப்பதோடு இது திட்டமிட்ட கொலைகளாக இருக்கலாம் என்று இரு நகர மேயர்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு கூடாரம் ஒன்று தீவைக்கப்பட்டுள்ளது.

கொலையாளியை பிடிப்பவர்களுக்கு தற்போது சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.



முடியை முழுமையாக மழித்து, தாடி வைத்துக்கொண்டிருக்கும், கறுப்பு உடை அணிந்த சந்தேக நபரின் படங்களைக் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

எளிதில் பாதிக்கப்படக்கூடிய வீடற்றவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் கொடூரமானவை என்று அதிகாரிகள் கூறினர். இரு நகரங்களின் வீடற்றவர்களும் உடனடியாகக் காப்பகங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# இலங்கையின் கலாசார மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு அமெரிக்கா உதவும்

(எம்.ஏ. அமீனுல்லா)

இலங்கையின் பன்முக கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருவதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், கண்டி அரசர்களின் அரண்மனையைப் பாதுகாத்தல் மற்றும் ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அரசர்களது அரண்மனையிலுள்ள தொல்பொருள்அருங்காட்சியகத்தை மேம்படுத்தல் என்பவற்றுகாக மானிய அடிப்படையில் 256,000 அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



கண்டிக்கு விஜயம் மேற் கொண்டிருந்த அமெரிக்கத் தூதுவர் நேற்று (15) கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டார். இங்கு உரையாற்றிய அவர்,

கலாசாரங்கள் மற்றும் நாகரிகங்களை பாதுகாப்பதில், அமெரிக்கா கவனம் செலுத்தும். அந்த வகையில் இலங்கையிலுள்ள சில, அடையாளங்களைப் பாதுகாக்க அமெரிக்கா உதவும்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் நான்கு பாரம்பரிய சடங்கு நடன வடிவங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கைவினைப் பொருட்களை ஆவணப்படுத்திப் பாதுகாக்க அமெரிக்கா 2016 இல் நடவடிக்கை எடுத்திருந்தது.

மலையக கண்டிய கொஹொம்ப கங்கரிய நடனம், வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் கூத்து நடன நாடகம், கிழக்கு மாகாண ஆதிவாசி சடங்குகள் மற்றும் கலாசார நடைமுறைகள், மற்றும் தென் மாகாணத்தில் கோலம் பாரம்பரியவிடயங்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு 116,000 அமெரிக்க டொலர் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கொட்டகலை பிரதேச சபையின் ஏற்பாட்டில் மகளிர் தின விழா

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, கொட்டகலை பிரதேச சபையின் ஏற்பாட்டில், சபை தலைவர் ராஜமணி பிரசாத் தலைமையில் மகளிர் தின விழா (15) கொட்டகலை ரிஷிகேஷ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கட்சியின் நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ரமேஷ்வரன், இ.தொ.காவின் கொட்டகலை பிரதேச சபை உப தலைவர், உறுப்பினர்கள் ஆகியோருடன் கட்சியின் பிரமுகர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள், கர்ப்பிணி தாய்மார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வின் போது மகளிரது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதோடு, கலந்து கொண்ட 500 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உலர், உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதோடு, கொரோனா காலங்களிலும் நோயாளர்களுக்கு சேவையாற்றிய வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், கொட்டகலை பிரதேச பகுதிகளில் உள்ள பெண் அதிபர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

# ஜீப் தடம்புரண்டு இருவர் உயிரிழப்பு

(தெல்தோட்டை தினகரன் நிருபர்)

கலஹா பொலிஸ் பிரிவிக்குட்பட்ட தெல்தோட்டை பட்டியகம பகுதியில், தொலைபேசி கோபுர திருத்தவேலைக்குச் சென்ற ஜீப்ரக கெப்வாகனம் பாதையைவிட்டு விலகியதில், அதில் பயணித்த இருவரும் ஸ்தலத்தில் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 3.00மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பில்,

பௌத்த விகாரையின் பிக்கு ஒருவர் கலஹா பொலிஸுக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்திக்கு விரைந்த பொலிஸார், ஊர்மக்களின் உதவியுடன் சடலங்களை தேடி கண்டு பிடித்தனர். இரண்டு சடலங்களும் தெல்தோட்டை மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு மரண பரிசோதனைக்காக பேராதனை வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கலஹா பொலிஸார் மேற்கொன்டு வருகின்றனர்.

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

(பசறை நிருபர்)

பதுளை, சரஸ்வதி தேசிய கல்லூரியின் 2022 ஆம் ஆண்டிற்கான பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் கல்லூரியின் அதிபரும், பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான கே.திருலோகசங்கர் தலைமையில் எதிர்வரும் (19) சனிக்கிழமை மு.ப.10.00மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது, ஏற்கனவே புதிய பதவிகளுக்காக கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் இவ்வாண்டிற்கான பழைய மாணவர் சங்க செயலாளர், பொருளாளர் உட்பட புதிய நிர்வாக் குழு அங்கத்தினர் தெரிவு இடம்பெறவுள்ளது. கல்லூரியின் தற்கால செயற்பாடுகளை வலுப்படுத்தல், கல்வி மேம்பாட்டு செயற்றிட்டங்களை பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக முன்னெடுத்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட உள்ளதாக சங்கத்தின் தற்போதைய செயலாளர் எஸ்.மகேந்திரகுமார் தெரிவித்தார்.

# பெண்களின் பிரச்சினைகளுக்கு இ.தொ.கா என்றும் குரல்கொடுக்கும்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

இ.தொ.கா எப்போதும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, கொட்டகலை பிரதேச சபையின் ஏற்பாட்டில், சபை தலைவர் ராஜமணி பிரசாத் தலைமையில் நடைபெற்ற மகளிர் தின விழாவில், கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது,

பொருட்களுக்காக வரிசையில் நிற்கும் யுகம் பிறந்துள்ளது. நாங்களும் டீசலுக்காக வரிசையில் நிற்கின்றோம். இதற்கு முன்னரும் இ.தொ.கா அரசாங்கத்துடன் பேசி மக்களுக்கானதை பெற்றுக் கொடுத்துள்ளது.



நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் எப்போதுமே இ.தொ.கா நிதி ஒதுக்க நடவடிக்கை எடுத்தது.

இதனை ராஜாங்க அமைச்சர் ஜீவனும் செய்து வருகின்றார். இ.தொ.கவுக்கு நிர்வாகம் தெரியவில்லை என்று விமர்சிப்போர், 11 உள்ளூராட்சி சபைகளை எமது கட்சி கைப்பற்றியதையும் சிந்திக்க வேண்டும்.

இங்குள்ள உறுப்பினர்கள் வேலை செய்யாது விட்டால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

மக்களுக்கு நன்மை செய்வது பற்றியே நாம் சிந்தித்து வருகிறோம் என்றார்.

# சமையல் எரிவாயு தட்டுப்பாட்டால் உல்லாச ஹோட்டல்கள் பூட்டு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை பெலிஹுல் ஓயா உல்லாசப் பயண வலயத்தில் அமைந்துள்ள உல்லாச ஹோட்டல்கள், உணவகங்கள் என்பன, மூடப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையால், இப்பிரதேசத்துக்கு உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை தருவது குறைவடைந்துள்ளது. அவ்வாறு வரும் ஒரு சிலரும், உரிய உணவு வசதிகள் இல்லாததால் அதிருப்தியுடன் திரும்பி செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் புகழ்பெற்ற இயற்கை வளங்கள் காணப்படும் இப்பிரதேசத்தை கண்டுகளிக்க வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர். எனினும் தற்போதைய நிலையில் இப்பிரதேசம் எங்கும் வெறிச் சோடி காணப்படுவதாகவும், இதனால் ஹோட்டல் தொழிற் துறை மட்டுமன்றி இப்பிரதேசத்தில் உல்லாச பயணிகளை நம்பியுள்ள வியாபாரிகளும் பெரும் நஷ்டமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தாயின் சடலத்தை அடக்க வசதியின்றி வீடு, வீடாகச் சென்று யுவதி நிதி சேகரிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

உயிரிழந்த தனது தாயின் சடலத்தை அடக்கம் செய்வதறக்கு பிரேதப் பெட்டியில்லாததால், வீடு, வீடாகச் சென்று யுவதி ஒருவர் பணம் சேகரித்துள்ளார்.

திருமணமாகாத இந்த யுவதி, கூலிவேலை செய்தே, தனது தாயாரைக் காப்பாற்றி வந்துள்ளார். இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

தனது, தாய் இறந்ததை அறிந்தவுடன் அவரது சடலத்தை துணியால் மூடிப் பலகைமீது வைத்த இந்த யுவதி, வீடு, வீடாகச் சென்று பணம் சேகரித்துள்ளார். பின்னர், சேகரித்த பணத்தில் பிரேதப்பெட்டியை வாங்கிய அந்த யுவதி, பிரேதத்தை அடக்கம் செய்துள்ளார்.

இச்சோகச் சம்பவம், கேகாலை தேவாலேகம பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யானை தாக்கி பௌத்த மதகுரு மரணம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்கம பிரதேசத்தில் (14) அதிகாலையில் காட்டு யானை தாக்கியதில், பௌத்த பிக்கு ஒருவர் ஸ்தலத்திலே மரணமடைந்ததாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பிடிபன சந்திரானந்த என்ற 54 வயதுடைய பௌத்த பிக்குவே,இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

முல்கம பகுதியிலுள்ள பௌத்த விகாரை ஒன்றில் கடந்த மூன்று வருடங்களாக வசித்து வரும் இந்த பௌத்த பிக்கு, அன்றைய தினம் அதிகாலையில் மத அனுஷ்டானத்தில் ஈடுபட்டு வெளியே சென்றுள்ளார்.

பின்னர், பிக்குவின் நடமாட்டம் குறைந்திருந்ததை பொது மக்கள் அவதானித்துள்ளனர்.

பொதுமக்கள் அவரைத் தேடிப் பார்த்ததில் விகாரைக்கு அருகில் யானை தாக்கி இறந்து கிடப்பதை அவதானித்தனர்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு பிரதேச மக்கள்

சென்றவேளை,பிக்குவின் பிரேதத்துக்கு அருகில், யானையும் காணப்பட்டது. இதுபற்றி, பலாங்கொடை பொலிஸாருக்கும், வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. அவ்விடத்திற்கு வந்த அதிகாரிகள் யானையை விரட்டியடித்தனர்.

பின்னர், பௌத்த பிக்குவின் பிரேதத்தை பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தனர்.



பதுளை கல்வி வலயத்திற்குட்பட்ட ஸ்பிரிங்வெலி கோட்டகொட தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவிகளான எம். சிவஷ்திகா (157)ஆர். தர்ஷினி (157) ஆகியோருக்கும் வழிகாட்டிய அதிபர். ஆசிரியர்களுக்கும் கல்விச் சமூகத்தினர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (படம்: லுணுகல நிருபர்)



பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட மஹாதோவ கீழ் தமிழ் வித்தியாலயத்தில், தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்த மாணவர்களான க.சர்மிளா (153), வி.டெரன் வின்சன்ட் (148) ஆகியோர் வகுப்பாசிரியை மற்றும் அதிபருடன் எடுத்துக்கொண்ட படம். (படம்: லுணுகல நிருபர்)



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கொட்டக்கலை தமிழ் தேசிய பாடசாலை மாணவி. லலித்குமார் நிக்ஷனா (161 புள்ளிகள்) பெற்று சித்தியடைந்துள்ளார். இவருக்கு அதிபர். ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். (படம்: லுணுகல நிருபர்)

# வழிப்பிள்ளையார் ஆலய நிர்வாகம்; தலவாக்கலையில் கலந்துரையாடல்

(லிந்துலை நிருபர்)

தலவாக்கலை பிரதேசத்தில் மரத்தை வெட்டியகற்றிய போது, பலியான ஆசிரியரின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்குதல் மற்றும் அப்பகுதியில் அமைந்துள்ள வழிப்பிள்ளையார் கோவில் நிர்வாகம், பிரதேசத்தை பொதுவுடமையாக மாற்றுவதற்கான செயற்பாடுகள் குறித்து தலவாக்கலையில் நடந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப் பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் கலந்து கொண்டார்.

சம்பவத்தில் பலியான ஆசிரியரின் மனைவி மற்றும் குடும்பத்தினர் வரவழைக்கப்பட்டு அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அவர்களுக்கான உதவிகளை விரைவில் செய்து தருவதற்கான ஏற்பாடுகளை தாம் முன்னெடுக்கப் போவதாக ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி அளித்ததாக நகரசபை தலைவர் தெரிவித்தார். அதேபோல் கடந்த பல தசாப்தங்களாக தலவாக்கலை லோகி சந்தியில் அமைந்திருந்த வரலாற்று அடையாளமான ஆலமரத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு ஒரு சிலரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் அங்குள்ள இந்து ஆலயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அதேசமயம் குறித்த வழி பிள்ளையார் கோவில் நிர்வாகம் மற்றும் பிரதேசத்தை பொதுமக்களின் பாவனைக்காக பொது உடைமையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் துரிதகதியில் முன்னெடுக்கப் போவதாக ஜீவன் தொண்டமான் உறுதியளித்தார்.

அதற்கமைய இவ்விடயம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று (16) தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவில் கலாசார மண்டபத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மாத்தளையில் பூங்கா நடைபாதை திறப்பு



(மாத்தளை சுழற்சி நிருபர்)

நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 45 மில்லியன் ரூபா செலவில் இராணுவத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட மாத்தளை வி.டி. நாணயக்கார பூங்கா நடைபாதை, நேற்று முன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, நடைபாதையை வைபவ ரீதியாக திறந்து வைப்பதையும் அருகில் மாத்தளை மாநகர சபை முதல்வர் பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மாபெரும் மகளிர் தின விழா







இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின நிகழ்வுகள் நேற்றைய முன் தினம் இ.தொ.காவின் இணை மாநிலங்கள் இணைந்ததாக எட்டு மாநிலங்களிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது. நுவரெலியா, ராகலை, ஹற்றன், தலவாக்கலை, பதுளை, பண்டாரவளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, அவிசாவளை மற்றும் மத்துகம ஆகிய பிரதேசங்களில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பரிந்துரைக்கமைவாக, மலையக பிரதேசங்களில் உள்ள இ.தொ.காவின் உபதலைவர்கள், அரசியல் அமைப்பாளர்கள், மாநில இயக்குனர்கள், மாநிலப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கலாக மகளிர் இணைப்பதிகாரிகள் இவ் விழாவினை ஏற்பாடு செய்துள்ளனர். இதில் 'பாலின சமத்துவம்' எனும் தொனிப்பொருளில் பேச்சுக்கள், கலாசார நிகழ்வுகள், விவாத மேடைகள் ஆகியன இடம்பெற்றன.

மலையக மகளிர் பிற சமூக மகளிருக்கு சமமாக சிந்திக்கவும், செயற்படவும் வாழவும் வேண்டும் என்பதற்காக பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான். குறிப்பாக மகளிருக்கு 52 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கி இ.தொ.காவின் பல்வேறு பிரிவுகளிலும் அவர்களை பங்களிப்பு செய்ய வைத்தவர். தலைமைபயிற்சி, மகளிர் முகாமைத்துவம், சமூக உணர்வு, அரசியல் பாசறை, தொழிற்சங்க பணியென்று மலையக மகளிரை பன்முகத் தன்மை கொண்டவர்களாக மாற்றும் முயற்சியில் அவர் ஈடுபட்டார்.

அதில் வெற்றியும் கண்டார். அதன் பலனாக எமது ஸ்தாபனத்தில் முக்கிய பொறுப்புகளை ஏற்று மலையக மகளிர் சிறப்பாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இ.தொ.காவின் பிரதித்தலைவரான திருமதி அனுசியா சிவராஜா தொழிற்சங்கதுறையில் பல்வேறு மட்டங்களிலும் அங்கம் வகித்து மத்திய மாகாண சபை உறுப்பினராக, மாகாண கல்வியமைச்சராக, இ.தொ.காவின் நிர்வாகச் செயலாளராக, பின்னர் பொதுச் செயலாளராக பல பொறுப்புகளை வகித்தமை இன்று நல்ல உதாரணம். எனவே தான் மகளிர் தின நிகழ்வுகளில் மகளிரை மாண்புபடுத்திட அமரர் தொண்டமானின் எழுச்சி நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவது சாலவும் பொருந்தும்.

பெண்களின் பலர் தோட்டக்கமிட்டித் தலைவிகளாகவும், மாதர்சங்க தலைவிகளாகவும் இருந்து வருகிறார்கள். இப்பெண் உறுப்பினர்கள் பலர் தேயிலை மலை மேற்பார்வையாளர்களாகவும் (சூபர்வைசர்) கங்காணிகளாகவும், உதவி தோட்ட அதிகாரிகளாகவும் இருக்கின்றார்கள். மாகாண சபைகளிலும் பிரதேச சபைகளிலும் நகர சபைகளிலும் இந்தப் பெண்களுக்கு போதுமான இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் எமது தமிழ் பெண்கள் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளில் தற்போது 27 அங்கத்தவர்களை கொண்டிருப்பது வரலாற்றில் பெருமையே. எமது கிளை பணிமனைகளில் பிரதிநிதிகளாக பலர் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். பலர் உப தலைவர்களாகவும் இருப்பது பெருமைத்தரக்கூடிய விடயமாகும்.

இம்மாபெரும் மகளிர் தின நிகழ்வுகளில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.கா. நிதிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், இ.தொ.கா பிரதித் தலைவர் அனுசியா சிவராஜா, பிரதேசத்திற்கு பொறுப்பான உபதலைவர்கள் பிரதேச சபையின் தலைவர்கள், உறுப்பினர்கள், மாவட்ட மகளிர் தலைவிகள், மகளிர் அணி நிர்வாக சபை பெண் உறுப்பினர்கள், பிரதேச சபை பெண் உறுப்பினர்கள், பெருந்தோட்ட சேவையாளர்களாக பணிபுரியும் பெண் உத்தியோகஸ்தர்கள், பல்வேறு தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள மகளிர் அமைப்புகள் இதில் பங்கேற்றனர்.

பல்வேறு கலாசார நிகழ்வுகளோடு இ.தொ.காவின் 11 மாநிலங்கள் இணைந்ததாக குறித்த பிரதேசங்களில் மிக சிறப்பாக நடைப்பெற்றது.

தேவதாஸ் சவரிமுத்து ...
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்







ஹற்றன்





கண்டி



மத்துகம



நோர்வூட்





அவிசாவளை





பதுளை





இரத்தினபுரி





தலவாக்கலை

# கிழக்கின் குரல்



# கல்முனை சுகாதார பிரிவிலுள்ள தனியார் மருந்தகங்கள் சோதனை

### பிராந்திய சுகாதார பணிப்பாளர் றிபாஸ்

ஒலுவில் விசேட நிருபர்



கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

மருந்து விற்பனை நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் மருந்து விற்பனையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கண்டறியும் பொருட்டு, தனியார் மருந்து விற்பனை அமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மருந்து விற்பனை நிலையங்களில் நிலவும் குறைபாடுகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மருந்து விற்பனை நிலையங்களில் பாரிய குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளதோடு, இதனை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களில், எதிர்காலத்தில் சுகாதாரத் துறை அதிகாரிகளால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். நோயாளிகளுக்கு பாதுகாப்பான மருந்து, மாத்திரைகளை கொடுப்பதை உறுதிப்படுத்த வேண்டியது எமது பாரிய பொறுப்புகளில் ஒன்றாக காணப்படுவதாகவும், இதனை உரிய மருந்தக உரிமையாளர்கள் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையை பயன்படுத்தி கூடுதலான விலைக்கு மருந்து பொருட்கள் விற்பனை செய்வதாக பொது மக்களால் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கூறினார்.

# கந்தளாயில் 20 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி வைப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குறைந்த வருமானம் பெறுகின்ற இருபது குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க ஞாயிற்றுக்கிழமை (13) அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளன.

கந்தளாய் வாத்தியாகம கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடுகள் இல்லாத அல்லது குறைந்த வருமானம் பெறுகின்ற இருபது குடும்பங்களுக்கே இவ்வாறு வீடுகள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டன.

இதனை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரலவினால் அடிக்கல் நாட்டப்பட்டன.

ஒரு வீடு அமைப்பதற்கு ஆறு இலட்சம் முதல் பத்து இலட்சம் வரை நிதியுதவி வழங்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஆகியோரின் விசேட தலையீட்டின் கீழ், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் மேற்பார்வையில், திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 2000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடைய மாணவன் சித்தி



கிண்ணியா மத்திய நிருபர்

வெளியாகி உள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நிபாசிர் முகம்மத் முர்ஸித் என்ற விசேட தேவையுடைய மாணவன் சித்தி அடைந்துள்ளார்.

இந்த மாணவன் 43 புள்ளிகளைப் பெற்று விசேட தேவையுடையோர் வகைக்குள் புலமைப்பரிசில் நிதிக்கான தகுதியை பெற்றுள்ளார்.

கிண்ணியா, மகாமாறு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இம் மாணவனின் தந்தை ஒரு கூலித் தொழிலாளி ஆகும். இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். தாயார் தினமும் இந்த மாணவனை நகரும் கதிரை (wheel chair) மூலமே பாடசாலைக்கு அழைத்து வருவது வழமையாகும்.

இந்த மாணவனின் தந்தை கருத்து தெரிவிக்கும் போது, அரசாங்கத்தின் உதவித்தொகையை பெறுவதற்கு எங்களது மகன் சித்தி அடைந்திருப்பது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியாகும்.

எந்த வசதியும் இல்லாமல் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் எங்களது மகனை படிக்க வைத்தோம். அவரது எதிர்கால கல்விக்காக இந்த நிதி எங்களுக்கு ஓரளவு ஆறுதலை தரும் என நினைக்கிறேன் என தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது அல்-ஹிலால் மாணவன் முதலிடம்

### கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் நேரில் சென்று வாழ்த்து

மாளிகைக்காடு குறூப் நிருபர்

சாய்ந்தமருது கோட்டத்திற்குட்பட்ட சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் 58 மாணவர்களும், சாய்ந்தமருது முஸ்லிம் அரசினர் கலவன் பாடசாலையில் 16 மாணவர்களும், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலையில் 4 மாணவர்களும், சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் 3 மாணவர்களும், அல் ஜலால் மற்றும் அல் கமறுன் வித்தியாலயங்களில் தலா ஒரு மாணவருமாக மொத்தம் 83 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சாய்ந்தமருது கல்வி கோட்ட வரலாற்றில் பெரும் தொகையான மாணவர்கள் சித்தியடைந்து இருப்பது இதுவே முதற்தடவையாகும் என, சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக் தெரிவித்தார்.

கல்முனை கல்வி வலயம் அம்பாறை மாவட்டத்தில் முதலாம், இரண்டாம் நிலைகளை பெற்றிருப்பதுடன் இந்த பரீட்சை முடிவுகளை பெறுவதற்கு காரணமாக அமைந்த பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கல்முனை வலய கல்விப் பணப்பாளர் எஸ்.புவனேந்திரன் நேரடியாக பாடசாலைகளுக்கு சென்று தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# மட்டு. மெதடிஸ்ட் கல்லூரியில் 45 மாணவர்கள் சித்தி

வெல்லாவெளி தினகரன் நிருபர்

வெளியாகியுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலையில்) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் வெட்டுப்புள்ளிக்குமேல் 45 பேர் சித்தியடைந்துள்ளதாக மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி முதல்வர் இராசதுரை பாஸ்கர் திங்கட்கிழமை (14) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்....

மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட மெதடிஸ்த மத்திய கல்லூரியில் 120 பேர் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி இருந்தார்கள்.

இவர்களில் 45பேர் வெட்டுப்புள்ளிக்கு அதிகமான புள்ளிகளை பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கும், பெற்றோருக்கும் புகழை ஈட்டித்தந்திருக்கின்றார்கள் என்றார்.

# மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் 453 மாணவர்கள் சித்தி

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் 453 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எஸ்.உமர்மௌலானா தெரிவித்தார்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகள் ஞாயிற்றுக்கிழமை (13) மாலை வெளியிடப்பட்டன.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலிருந்து 220 மாணவர்களும்,

ஓட்டமாவடி கல்வி கோட்டத்திலிருந்து 139 மாணவர்களும், ஏறாவூர் கல்வி கோட்டத்திலிருந்து 94 மாணவர்ளுமாக 453 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்தில் 66 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர்.

கடந்த 2020ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் 50 மாணவர்கள் இம் முறை அதிகமாக சித்தியடைந்து வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வலயத்தில் கடந்த 2020ல் 450 மாணவர்களும், 2021ல் 453 மாணவர்களும் சித்தியடைந்து வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை தெற்கில் வாய் சுகாதார பிரிவு திறந்துவைப்பு

பெரியநீலாவணை விசேட நிருபர்



கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சமூக வாய் சுகாதார பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்றது.

பொதுமக்களுக்கு கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் வழங்கப்படும் சேவைகளை விஸ்தரிக்கும் நோக்கில் இந்த சமூக வாய் சுகாதார பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு வாய் சுகாதார பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. இந் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றியாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சமூக வாய் சுகாதார பிரிவை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி.ஏ.வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சி.எம்.மாஹிர், டொக்டர் எம்.ஐ.றிஸ்ரின், டொக்டர் ஏ.ஏ.வாஸி, டொக்டர் ஐ.எம்.முஜீப், டொக்டர் எம்.எம்.பைறூஸ், டொக்டர் டேனியல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இலங்கையிலுள்ள சகல வைத்தியசாலைகளையும் இணைய தளத்தின் ஊடாக ஒருங்கிணைப்பதற்கான 'ஸ்வஸ்தி' தகவல் முகாமைத்துவ கட்டமைப்பை உருவாக்குவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் கணனிகளும் அதற்குரிய உதிரிப் பாகங்களும் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தலைமையில் வழங்கி வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

# சாய்ந்தமருது ஷம்ஸில் 04 மாணவர்கள் சித்தி

அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்



கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மல்ஹறுஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலையில்) இவ்வருடம் நடைபெற்ற 2021ம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் நான்கு மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக கல்லூரி அதிபர் எம்.எஸ்.எம்.ஐ.மதனி தெரிவித்தார்.

கொவிட்19 தொற்றுநோய் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் கல்வி கற்ற இம்மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர் உட்பட பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர். எம்.என்.அன்சாப் 168, ஏ.பாத்திமா நஜா 165, ஏ.ஜே. முகம்மட் தஹிப் 162 மற்றும் எம்.என்.நௌப் 149 ஆகியோரே சித்தியடைந்த மாணவர்களாகும்.

# புலமை பரிசில் பரீட்சையில் குடும்ப சாதனை பதிவு



மாளிகைக்காடு குறூப் நிருபர்

இறக்காமத்தில் இலுக்குச்சேனை முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவி ஜிப்ரி சனா சபியா வெளியாகிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று குடும்ப சாதனையை பதிவிட்டுள்ளார்.

இறக்காமம், வாங்காமம் பிரதேசத்தில் வதியும் இம் மாணவியின் சகோதர, சகோதரிகள் 4 பேர் தொடர்ச்சியாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தே வந்துள்ளனர்.

கொரோனா கெடுபிடிகளுக்கு மத்தியில் சவாலை ஏற்று சாதித்து ஐந்தாவது பெருமையை சேர்த்திருக்கிறார் இம் மாணவி.

வாங்காமத்தைச் சேர்ந்த ரோஷான் ஏ.ஜிப்ரி நம்ஸியா தம்பதிகளின் ஐந்து பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் ஐவரும் தொடரான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். பாடசாலை அதிபர் முஹம்மட் ஹாறுதீன் உள்ளிட்ட கற்பித்த ஆசிரிய, ஆசிரிகைகளுக்கு இம் மாணவி தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

# இறக்காமம் பிரதேசத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கு உபகரணம்

பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்

கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு பிரதேச விதாதா வள நிலையங்கள் ஊடாக 'ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில் முயற்சியாளர்' எனும் விஷேட வேலைத் திட்டத்திமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 11 தொழில் முயற்சியாளர்களுக்கு 19,100 ரூபா பெறுமதியான தொழில்சார் பொறி இயந்திரங்கள் அண்மையில் இறக்காமம் பிரதேச செயலகத்தினால் வழங்கி வைக்கப்பட்டன.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஷ்ஷான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நசீல், கணக்காளர் ஏ.எல்.எப்.றிம்ஷியா , விதாதா வள நிலைய விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏ.ஜி.கே.முஹம்மட் ஆகியோர் கலந்து கொண்டு இவர்களுக்கான தொழில் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இதன்போது யோகட் தயாரிப்பதற்கு தேவையான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேச மட்டத்தில் சுயதொழில் முயற்சியாளர்களை வலுவூட்டி அவர்களின் தொழில் முயற்சி மற்றும் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி சந்தைக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கிலேயே மேற்படி வேலைத்திட்டம் முன்னெடுக்க ப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை நாலாம் கட்டை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், சந்தேக நபரொருவரை திங்கட்கிழமை (14) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 14 கிரேம் 470 மில்லிகிரேம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இதேவேளை குறித்த நபரை பொலிஸார் கண்காணித்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலை அடுத்து இவர் சுற்றி வளைக்க பட்டதாக தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# நகர்வலம்



குடும்பத்தகராறு; கூரிய ஆயுதத்தால்

## மனைவியின் கழுத்தை வெட்டிய பின்னர் கணவன் தற்கொலை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

குடும்பத்தகராறு காரணமாக கணவன் மனைவி இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது கூரிய ஆயுதம் ஒன்றினால் தனது மனைவியின் கழுத்தினை வெட்டி படுகாயப்படுத்திவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவமொன்று அநுராதபுரம் சியம்பலாவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பரசன்கஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பரசன்கஸ்வெவ பொலிஸ் பிரிவிலுள்ள புவரசன்குளம் சியம்பலாவ பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

பானியங்கடவள, புவரசன்குளம், சியம்பலாவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 37 வயதுடைய ருவன் பத்திரன எனபவரே தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. தற்கொலை செய்து கொண்டவருடய மனைவி ஆபத்தான நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது மேலும் தெரியவந்துள்ளது. அநுராதபுரம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வைத்தியரத்ன அவர்களின் ஆலோசனைப்படி பரசன்கஸ்வெவ பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஹெட்டிஆராச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கற்றவர்களை மதிக்கும் தலைவராக ஜனாதிபதி காணப்படுகிறார்

### வடமத்திய மாகாண ஆளுநர் புகழாரம்



அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உள்ள போதும் கற்றவர்களை மதிக்கும் தலைவர் ஒருவர் இருப்பது நாட்டிற்கு பெரும் பலம் என வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற 638 பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் உள்வாங்கும் ஆரம்பக் கல்வி பற்றிய 07 நாள் பயிற்சியை முடித்துக்கொண்ட பயிலுனர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வைப்பெற்றுக் கொடுக்கும் வகையில் புதிய நியமனங்களைப்பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 638 பேரை மாகாண கல்வி திணைக்களத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளன. குறித்த உத்தியோகத்தர்களை பாடசாலைக்கு இணைக்கப்பட்ட பிறகு வகுப்பினுள் ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் குணநலங்கள் மற்றும் அதி சிறந்த பயனுள்ள சேவையினை வழங்குவார்கள் என்ற நோக்கில் ஆளுநரின் யோசனைப்படி இந்த 07 நாள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஆளுநர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் , வடமத்திய மாகாணத்தின் கல்வி நிலை பற்றி மிகவும் கவலைப்படுகின்றேன். இந்நிலையை மாற்றியமைக்க நாம் அனைவரும் இதற்காக ஒன்றிணைய வேண்டிய நேரம் இதுவாகும். மேலும் மாகாணத்தில் சிறுவர்களின் கல்வித்தரம் விரைவில் உயர்த்தப்பட வேண்டும். அதன் மூலம்தான் மாகாணத்தில் கல்வி நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும். அதற்காக அறிவு எனும் பாட ஆயுதத்தை சிறுவர்களுக்கு புகட்ட கூடிய ஆசிரியர் குழு தேவை. ஆசிரியர் பிரச்சினை தீராதவரைக்கும் எமது மாகாணத்தில் கல்வி மட்டத்தினை அதிகரிக்க முடியாது என்றார்.



ஸ்தாபக குழு இயக்கம் வலம்புரி கவிதா வட்டம் (இலங்கை) மறைந்த வகவம் ஸ்தாபக பொதுச்செயலாளர் கவிஞர் கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்திய சர்வதேச கவிதைப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற தமிழ்நாடு புலவர் எஸ். மோகன்குமார் அவர்களுக்கான ரூபா 25000/= பணப்பரிசினையும், விருதினையும், சான்றிதழையும் இந்தியாவின் இலங்கை உதவித் தூதுவர் டாக்டர் வெங்டேஸ்வரன் அவர்களுடன் இணைந்து, சென்னையில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலய அலுவலகத்தில் வைத்து இலக்கியப்புரவலர் ஹாஸிம் உமர் வழங்கி வைப்பதையும். அருகில் தினகரன் ஆசிரியர் செந்தில்வேலவர் அவர்கள் காணப்படுவதை படத்தில் காணலாம்.

ரமழானை முன்னிட்டு;

## வெலிப்பன்னை தீனிய்யா மத்ரஸா ஏற்பாட்டில் வினா விடை போட்டி

ஏ.எஸ்.எம்.ஜாவித்

வெலிப்பன்னை மத்ரஸதுன் நூருத் தீனிய்யாஹ் குர்ஆன் மத்ரஸா தனது இருபத்தைந்தாவது வருட நிறைவை முன்னிட்டு தீன் சுடர் இஸ்லாமிய வினாவிடைப் போட்டியொன்றை எதிர்வரும் ரமழான் மாதத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் ரமழான் ஆரம்பத்தில் இருந்து 25 நாட்களுக்கு தினம் ஒரு வினாவாக வினாக்கள் தரப்படும். அவற்றுக்கு அன்றைய தினமே விடையளிக்க வேண்டும்.

போட்டி முடிவில் ஐம்பதுக்கு மேல் புள்ளிகளைப் பெறும் சகலருக்கும் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அதிஷ்டசாலியாகத் தேரிவு செய்யப்படுபவருக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும்.

இது whats App மூலம் நடைபெறவுள்ளதால் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் பெயர், முகவரி, whats App இலக்கம் போன்றவற்றை மார்ச் 25 ஆம் திகதிக்கு முன்னர் 0741366734 என்ற இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறும் போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் இம்மாத இறுதியில் வழங்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## இ.போ.ச டிப்போ மூலம் பாடசாலை பஸ் சேவை

(வெலிகம தினகரன் நிருபர்)

தென் மாகாண பாடசாலை மாணவர்களின் நலன்கருதி பிராந்திய இ.போ.ச. டிப்போ மூலம் 'சிசுசெரிய' பஸ் சேவைக்காக 82 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்தாக இ.போ.ச. றுகுணு பிராந்திய முகாமையாளர் ஆர். வி. பிரபாத் குமார தெரிவித்தார்.

பாடசாலை தவணை ஆரம்பித்தோடு எரிபொருள் தட்டுப்பாடு நிலவியபோதும் பாடசாலை மாணவர்களின் அவசியத் தேவையை பூர்த்திசெய்ய றுகுணுபிராந்திய சேவைக்குச் சொந்தமான 11 டிப்போக்களுக்கும் பஸ் சேவை வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தினமும் 470 பஸ் சேவைகள் றுகுணு பிராந்தியத்தில் இடம் பெற்று வருகின்றதாக முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

## ஆனமடுவ பகுதி வீதி விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

முந்தல் கீரியங்கள்ளி மற்றும் ஆனமடுவ ஆகிய பகுதிகளில் நேற்றிரவு இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் கீரியங்கள்ளி ஆன்டிகம பிரதான வீதியின் 5ம் கட்டை பகுதியில் (13) இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முந்தல் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு கீரியங்கள்ளி பகுதியை நோக்கிப் பயணம் செய்த கார் ஒன்று, எதிர்த்திசையில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதிவிட்டு வேகமாக சென்றபோது, கட்டுப்பாட்டை இழந்த குறித்த கார் வீதியோரத்தில் இருந்த மின்சார தூண் ஒன்றில் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த காரை செலுத்திச் சென்ற சாரதியையும், சாரதிக்கு அருகில் இருந்து பயணம் செய்த நபரையும் அங்கிருந்தவர்கள் உடனடியாக முந்தல் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், காரில் சாரதிக்கு அருகில் இருந்து பயணித்த நபர் வீதியில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, புத்தளம் ஆனமடுவ நவகத்தேகம வீதியின் ஆனமடுவ நகரில் (13) இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகல், குடா கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## விலைவாசி அதிகரிப்பை கண்டித்து; பேருவளை நகர சபை கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் அமளிதுமளி

பேருவளை விசேட நிருபர்

எரிபொருள் விலையை அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேருவளை நகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று (14) நகர சபை கூட்டத்தின் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக பேருவளை நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி தெரிவித்தார்.

மாதாந்த கூட்டம் பேருவளை நகர சபை தலைவர் மஸாஹிம் மொஹமட் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே எதிர்க்கட்சியினர் கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எரிபொருள் விலை ஏற்றத்தை உடனடியாக குறைக்கும்படியும் வாழ்க்கைச் செலவை குறைக்கும்படியும் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்து பேருவளை நகர சபையின் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து எதிர்ப்பு பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி, இன்று நாட்டில் நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு, விலைவாசிகளின் அதிகரிப்பு தொடர்பில் நாம் எதிர்ப்புத் தெரிவித்தே இவ்வார்ப்பாட்டத்தை முன்னெடுத்தோம். மக்கள் இன்று பல்வேறு வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இது விடயமாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஹஸன் பாஸி இதன்போது தெரிவித்தார்.



## சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள் கண்காட்சி 5வது தடவையாகவும் கொழும்பில்

(அஷ்ரப் ஏ சமத்)



சுயதொழில் முயற்சி மற்றும் சிறுகைத்தொழில் மகளிர் அமைப்பு 5வது முறையாகவும் தமது உற்பத்திப் பொருட்கள் கொண்டதொரு கண்காட்சியினையும் விற்பனையையும் (13) கிருலப்பனையில் உள்ள கிரீன் கார்டனில் முழுநாளாக நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக 2220ஆம்ஆண்டின் இலங்கையின் உலக அழகு ராணி கரிலோயின் ஜூரி, கௌரவ அதிதியாக மரியம் ஹாசிம் உமர் ஆகியோர்கள் கலந்து கொண்டு இக் கண்காட்சியைத் திறந்து வைத்தனர். கொழும்பு மகளிர் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி நாசியா யாக்ஹூப் இவ் ஏற்பாட்டினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருடத்தின் கொரோனா தொற்று நோய் காரணமாக சுயதொழில் முயற்சி மகளிர்கள் தமது உற்பத்திகளை விற்பனை செய்வதில் பெரிதும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்தனர். இவ் விற்பனைக் கண்காட்சியில் 45 மகளிர்கள் தமது உற்பத்திகளை காட்சிக்கு வைத்தன் பயனாக 75வீதமான உற்பத்திகளை பார்வையாளர்கள் கொள்வனவு செய்ததாக கூறினர்.

இங்கு உணவு உற்பத்திகள், உடை அழங்காராம், வடிவமைப்பு கிராமிய கலை கலாசார உள்ளூர் உற்பத்திகள், சிறுவர் விளையாட்டு, மருதோண்டி அலங்காரம், இந்திரா காந்தி புற்றுநோய் நிறுவனத்திற்காக உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனை ஹைராத்தில் 5 மாணவர்கள் சித்தி



மட் / மம/ வாழைச்சேனை ஹைராத் வித்தியாலயத்தில் இருந்து இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 36 மாணவர்களில் 5 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இதில் 27 மாணவர்கள் 70 மேற்பட்ட மதிப்பெண்களை பெற்று சித்தியடைந்துள்ளனர்

சித்திபெற்ற மாணவர்கள் விபரம்கள்; எம். எம். அனாம் தகி (177) , எம். எஸ்.உபைதுர் ரஹ்மான் (169), எஸ். ஏ . தானிஸ் அக்மல் (165) , எச்.எம்.சைமுல் ஹக் (163), எம் வை எம் மஹ்தி ஆகிப் (147) புள்ளிகளை பெற்று பாடசாலைக்கு கௌரவத்தை கொடுத்துள்ளனர் இந்த மாணவரக்ளுக்கு எச்.எம் ஜவாத் அலி மற்றும் ஏ.பீ.எம் . ஹைதர் ஆகிய ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு பாடசாலை அதிபர் யூ.எல் . அஹமட் லெப்பை வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

## புத்தளத்தில் கோவா செய்கை பாதிப்பு; விவசாயிகள் கவலை

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளத்தில் காலநிலை மாற்றத்தால் கோவா செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி, நுரைச்சோலை, பூலாச்சேனை மற்றும் முந்தல் ஆகிய பகுதிகளில் இவ்வாறு கோவா செய்கை இம்முறை பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த அறுவடை காலத்தை விடவும் இம்முறை கூடுதலான விளைச்சல் காணப்பட்ட போதும், கடுமையான வெப்பநிலை காரணமாக அதிகமான கோவா ஒருவகை நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி அழுகிய நிலையில் பழுதடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். உரப்பிரச்சினை, நோய்த் தாக்கத்திற்கு தெளிக்கும் எண்ணெய் உள்ளிட்ட பசளைகளின் அதிக விலை காரணமாக இம்முறை விவசாய உற்பத்திகளுக்கு அதற்குரிய உரம், எண்ணெய் என்பவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்பட்டதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவித்தனர். இதேவேளை, ஒரு கிலோ கோவா 50 ரூபா முதல் 80 ரூபா வரை நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் கொள்வனவு செய்வதாகவும் விவசாயிகள் கூறினர்.

# தினகரன் 90ஆவது வருட நிறைவு விழா













தினகரன் பத்திரிகையின் 90ஆவது வருட நிறைவு விழா தினகரன் ஆசிரிய பீடத்தில் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டப்ளியூ தயாரத்தன, சட்டம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ரகித்த அபேகுணவர்தன, நிதிப் பணிப்பாளர் ஜானக்க ரணதுங்க, ஆசிரிய பீடப் பணிப்பாளர் தர்மசிறி காரியவசம், பிரதிப் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் 90 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி கேக் வெட்டப்பட்டதுடன் சமூக சேவை மற்றும் தினகருடன் இணைந்து பயணித்தமையை கௌரவப்படுத்தும் நோக்கில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். எம். எம்.எம்.வதூத் (தலைவர் கிலசிக் கிரேசன்), எம்.சிறிகாந்தன் நெலும் பிரைவட் லிமிடட் முகாமைத்துவ பணிப்பாளர், சஹிட் எம் ரிஷ்மி அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர், சின்னதுரை வேதவனம், வேலுப்பிள்ளை சிதம்பரநாதன், காசிம் பாவா மெஹமட் சியாம் ரூபவாஹினி தொலைக்காட்சி தமிழ் செய்தி பிரிவு பணிப்பாளர் மற்றும் எமது நிருபர் எழுத்தாளர் அலியார் இக்பால் ஆகியோருக்கு விசேட விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

படங்கள்: சாலிய ரூபசிங்க,சமந்த வீரசிறி, சுதத் மலவீர









# மனித உரிமைகள் பேரவை அமர்வில் வெற்றிகரமாக முகங்கொடுத்த இலங்கை

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் விளக்கம்

சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடருக்கு இலங்கை வெற்றிகரமாக முகங்கொடுத்ததாகவும், குற்றச்சாட்டுகளுக்கு தர்க்கரீதியாக விடயங்களை முன்வைத்து, அவற்றை தெளிவுபடுத்திக் கொள்ள முடிந்ததாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் ஜெனீவாவில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும், அவை மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் சவால்களும் இலங்கையும்' என்ற தலைப்பில் நேற்று (15) முற்பகல் ஜனாதிபதி ஊடக மையம் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார். இந்த ஊடகச் சந்திப்பு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்கவினால் நடத்தப்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிசெல் பெஷலேவின் தற்போதைய அறிக்கையில் அதிக அவதானம் செலுத்தப்பட்டிருந்தது, யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களை விட, சுதந்திர நாட்டின் உள்ளக அரசியல் விடயங்களே அவை ஆகும் என்று ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

"அலுவலகத்திற்கு இதுபோன்ற உள் விவகாரங்களை விசாரிக்க உரிமை உள்ளதா என்றும், அது ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு ஏற்ப உள்ளதா என்றும் நாங்கள் வினவினோம்.

பல்வேறு கூட்டங்களை நடத்தி, நாங்கள் பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இந் நிலைமையைத் தெளிவுபடுத்தினோம். 31 நாடுகள் இலங்கைக்காக பேரவையின் இடைச் செயற்பாட்டுக் கலந்துரையாடலின் போது குரல் கொடுத்தன. அங்கு இலங்கைப் பிரதிநிதிகளின் பிரதான தர்க்கமாக அமைந்தது. உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது என்பதே அது ஆகும். ஒரு நாட்டில் ஒரு விடயத்தை செய்வதற்கும் அதில் வெற்றி பெறுவதற்கும் அந்நாட்டின் ஒத்துழைப்பு அவசியம்" என்று அவர் தெரிவித்தார்.

இலங்கைப் பிரதிநிதிகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவருடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும், அதற்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 51ஆவது அமர்வு இலங்கை எதிர்கொள்ளும் அடுத்த சவாலாகும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார். இதற்கு முறையான கால அட்டவணையுடன் கூடிய உரிய திட்டமிடல்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும், அதற்காக சிவில் சமூகம், புத்திஜீவிகள் உட்பட அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் போராட்டங்கள் நடத்துவது எல்.ரி.ரி.ஈ கருத்துடையோர் மற்றும் அதற்கு துணைபோவோர் அடங்கிய மிகச் சிறிய குழுவினாலேயே முன்னெடுக்கப்படுவதாகவும், அவற்றினால் இலங்கைக்கு பெரிய தாக்கம் ஏற்படப் போவதில்லை என்றும், எவ்வாறாயினும் அவர்களையும் நாட்டின் அபிவிருத்தியில் ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டுமென்றும், கலந்துரையாடல்கள் மூலம் முன்னேற்றத்தை அடைந்து கொள்ள எதிர்பார்ப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.



கடந்த இரண்டரை வருடங்களைப் போன்று, குறிப்பாக கடந்த ஆறு மாதங்களில் ஏற்பட்டுள்ள தெளிவான முன்னேற்றம் குறித்து குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம், புலிகளுடன் தொடர்புபட்டிருந்த 81 சிறைக்கைதிகளை விடுதலை செய்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் போன்ற பல சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

***(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)***


## வேலை வாய்ப்புகள்

இலங்கையில் இயங்கிவரும் TMT கம்பி உற்றப்பத்தி செய்யும் முதன்மை நிறுவனங்களில் ஒன்றான, கம்பி உற்பத்தி செய்வதில் 15 வருட அனுபவமுடையதுமான எமது S.R Steel (Pvt) Ltd நிறுவனத்துக்கு திறன் மிக்க நேர்த்தியாக வேலை செய்யக்கூடிய அனுபவமுடையவர்கள் தேவைப்படுகின்றனர்.

### உலை பிரிவு (Furnace Section)
(TIMMER MAN / MAINTENANCE FITTER / MOULD REMOVER / FURNACE MELTER / BURRY MAN)

- ✓ இத் துறை தொடர்பாக குறைந்தது 3 வருட அனுபவமுடையவர்கள் தேவை.
- ✓ பராமரிப்பு தொடர்பாக டிப்ளோமா (Diploma) சான்றிதல் பெற்று இருத்தல் அவசியம்.
- ✓ சா/தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் கட்டாயமாக சித்தி அடைந்திருத்தல் அவசியம்.
- ✓ சம்பளம் பேசி தீர்மாணிக்கப்படும்.

### ROLLING MILL SECTION
(HOOK MAN / MILL FITTER / MILL OPERATOR / PUSHER MAN / COOLING BED OPERATOR)

- ✓ இத் துறை தொடர்பாக குறைந்தது 3வருட அனுபவமுடையவர்கள் தேவை.
- ✓ சா/தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் கட்டாயமாக சித்தி அடைந்திருத்தல் அவசியம்.
- ✓ சம்பளம் பேசி தீர்மாணிக்கப்படும்.

தகைமைக்கேற்ற அனுபவத்திற்கேற்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தற்போது நிலவிவரும் கொவிட் -19 தொடர்பான கடினமான சூழல் நிலவிவருவதால் அதுதொடர்பான தடுப்பூசி முற்றாக பெற்றவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை 7 நாட்களுக்கு முன் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி (E-Mail) career.srsteel@gmail.com மற்றும் தபால் மூலமும் அனுப்பிவைக்கலாம் அனுப்பவேண்டிய முகவரி
NO 5, SANGAMITTA MAWATHA, COLOMBO-13
தொ/பேசி- 011-2421373

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களின் உறவினர்கள் சாராத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர்களையும் தொலைபேசி எண்களையும் குறிப்பிடவும்



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவனம் (SLITHM) மூலப்பொருட்களுக்கான பெறுகை

மூலப் பொருட்களின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவனத்தின் சார்பாக பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களுடன் விண்ணப்பிக்கலாம்.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்தக் காலமானது ஒரு வருடமாகும் (365 நாட்கள்) என்பதுடன் நான்கு மாதங்களுக்கொரு தடவை விலைகள் மீளமைக்கப்படும்.
3. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் எந்தவொரு பொது நிறுவனத்திலேயும் அபகீர்த்தியாளர்களாக பட்டியலிடப்படுதல் ஆகாது.
4. 2022.03.16 ஆம் திகதியிலிருந்து 2022.04.06 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பின்வருமாறுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவன காசாளரிடம் அல்லது சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கி கூட்டுரு கிளையின் 7120156 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்பட்டு பெற்றுக் கொண்ட வரவுத் துண்டின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

| இலக்கம் | பாடசாலை | தொகை |
|---|---|---|
| 1. | கொழும்பு | 3,500.00 |
| 2. | அனுராதபுரம் | 1,500.00 |
| 3. | குருநாகல் | 2,000.00 |
| 4. | பண்டாரவளை | 1,500.00 |
| 5. | கண்டி | 3,000.00 |
| 6. | கொக்கல | 1,500.00 |
| 7. | இரத்தினபுரி | 2,000.00 |

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.04.06 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement of Raw Material 2022/2023"** என எழுதப்பட்டு ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவனம், இல. 78, காலி வீதி, கொழும்பு-03 '' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவன பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். 2022.04.06 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவன 7 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
6. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. இது தொடர்பான மேலதிக தகவலை வேலை நேரங்களில் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி இல.: 011-2208300)
8. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகுமென்பதுடன் அலுவலகர்களுடான ஆதரவு தேடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ இலங்கை நிறுவனம்.**



## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP YX-3180 Bajaj, 2012, WP YV-4178 Bajaj, 2011, SP QG-564 8 Bajaj, 2006, Threewh e el கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 019886

**வேலைவாய்ப்பு**

**319 வெற்றிடங்கள்**
வீட்டு வேலையாளர்கள்

50 வயதுக்குக் குறைந்த வீட்டுப் பணிப்பெண் தேவை. 0773663978, 0712181811 018671

**320 வெற்றிடங்கள்**
ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியில் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016127

**325 தொழில்துறை**
பொது

இன்டர்லொக் கல் தயாரிக்கும் நிறுவனத்திற்கு கல் தயாரிக்கும் ஊழியர்கள் மற்றும் கல் பிடிப்பதற்கு கையுதவியாட்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. 0714465817. 019892



## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை - நுவரெலியா

**கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான அழைப்பு**

இலங்கை சுகாதார அமைச்சின் சார்பாக, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கை நிர்மாணப்பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.03.16 முதல் 2022.04.06 மு.ப.11.30 வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக, மேற்படி முகவரியின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுத் திறத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில், 2022.03.16 முதல் 2022.04.05 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 மற்றும் பி.ப.3.00 இற்கிடைப்பட்ட காலத்தில் விலைமனுப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாமென்பதுடன் இலவசமாக அவற்றை பரிசீலனை செய்து கொள்ளலாம்.

விலைமனுப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுதாரர்கள், தமது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான காட்சிகள் மற்றும் விலைமனுக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் கணக்காளரினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | கோவை இலக்கம் | உருப்படி | தகைமை | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | GH/NE/AL/01/04/2022 | 2022 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் (ரூபா.300,000.00 இற்கு மேற்படாத பராமரிப்பு ஒப்பந்தம்) | C 09 அல்லது அதற்கு மேல் | 2,000.00 |
| 02 | GH/NE/AL/01/05/2022 | 2022 ஆம் ஆண்டிற்கான வடிகான் தொகுதியை பராமரிப்பு ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் (ரூபா.300,000.00 இற்கு மேற்படாத வடிகான் பராமரிப்பு ஒப்பந்தம்) | C 09 அல்லது அதற்கு மேல் | 2,000.00 |

மேலதிக விபரங்களிற்காக பிரதான அலுவலகத்தை அழைக்கவும் ஏதெனும் விலைமனுவொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்தியப் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர் - பிராந்திய பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நுவரெலியா**

**தொ.பே.இல:0522224310**
**நீடிப்பு 1408 அல்லது 1345**
**0522224311 நீடிப்பு 1408 அல்லது 1345**



## வெற்றிடங்கள்

### நீர்ப்பாசன அமைச்சு

### ஜின் நில்வளா திசைதிருப்புதல் திட்டத்தில் வெற்றிடங்கள்

தென் கிழக்கு உலர் வலயத்தின் நில்வளா மற்றும் ஜின் படுகைகளின் மேலதிக நீரை திசைதிருப்புவதற்காக நீர்ப்பாசன அமைச்சினால் ஜின் நில்வளா திசைதிருப்புதல் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சினால் அமுல்படுத்தப்படும் ஜின் நில்வளா திசைதிருப்புதல் திட்டத்தின் திட்ட அமுலாக்கல் பிரிவிலுள்ள பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

1. **சிரேஷ்ட காணி அதிகாரி (PS 5) - 01 பதவி, சிரேஷ்ட சமூக அதிகாரி (PS 5) - 01 பதவி மற்றும் சிரேஷ்ட சுற்றாடல் அதிகாரி (PS 5) - 01 பதவி**

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்**

**பின்வரும் I அல்லது II அல்லது III**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபுடைய துறையில் ஒரு இளமாணிப் பட்டம்

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாக இயைபுடைய துறை பட்டப்படிப்புக்கு சமமான தகைமை

**அல்லது**

இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட சிவில் பொறியியலில் ஒரு தொழில்சார் தகைமை / இணை அங்கத்துவம்

**அல்லது**

தொழில்நுட்பத் துறை தொடர்பான பதவிக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதியில் 7ஆம் மட்டத்திற்குக் (NVQ Level-7) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்

**மற்றும்**

விசேடத்துவத்தின் தேவையான பரப்பில் குறைந்தபட்சம் 06 வருட கால அனுபவம்.

II. தொழில்நுட்பத் துறை தொடர்பான பதவிக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதியில் 6ஆம் மட்டத்திற்குக் (NVQ Level-6) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்

**மற்றும்**

விசேடத்துவத்தின் தேவையான பரப்பில் குறைந்தபட்சம் 11 வருட கால அனுபவம்.

III. தொழில்நுட்பத் துறை தொடர்பான பதவிக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதியில் 5ஆம் மட்டத்திற்குக் (NVQ Level-5) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்

**மற்றும்**

விசேடத்துவத்தின் தேவையான பரப்பில் குறைந்தபட்சம் 16 வருட கால அனுபவம்.

**சம்பள அளவு:** PS 5 - ரூபா 105,000.00 - 113,000.00 (01/2019ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

**பொது நிபந்தனைகள்:**
1. வயது: விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 21 வயதுடையவர்களாகவும் 60 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. சம்பளம்: 2019-03-15ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
3. நீர்ப்பாசனத் துறை திட்டங்களில் உள்ள அனுபவம் மேலதிக தகைமையாகும்.
4. இந்த பதவிகள் ஒப்பந்த அடிப்படையிலானவையாகும் என்பதுடன் ஆரம்பத்தில் ஓர் ஆண்டு காலத்திற்கும் திட்டத் தேவையின் பொருட்டு செயல்திறன் அடிப்படையில் சேவை நீடிப்பு அடிப்படையிலானதாகும்.
5. இந்தப் பதவிகள் அலுவலகம் மற்றும் வெளிக்கள கடமை ஆகிய இரண்டையும் கொண்டதாகும். வேலை இடமானது காலியிலுள்ள திட்ட அமுலாக்கல் பிரிவில் இருக்கும் என்பதுடன் ஒவ்வொரு அதிகாரியும் கடமைகளைச் செய்யவேண்டும் என்பதால் திட்டப் பகுதிகளில் (நெலுவ / கொட்டபொல / பஸ்கொட / வீரகெட்டிய) பணிக்கமர்த்தப்படுவர்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சகல விண்ணப்பதாரர்களும் தமது சுய தரவுகள் (Curriculum Vitae) சகிதம் உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் தொடர்பு விபரங்கள் மற்றும் கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பதாரர்கள் உயர்ந்த தகைமைகள் மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு குறும் பட்டியலிடப்பட்டு, நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர் என்பதுடன் திறமையின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும். அரசாங்க சேவை / நியாயாதிக்கச் சபை / கூட்டுத்தாபனங்கள் அல்லது ஏனைய அரச நிறுவனங்களில் சேவையாற்றும் அபேட்சகர்கள் தாம் தெரிவு செய்யப்பட்டால் முழு நேர அடிப்படையில் தம்மை விடுவிக்க முடியும் எனக் குறிப்பிட்டு தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை 2022 மார்ச் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் திட்டப் பணிப்பாளர், ஜின் நில்வளா திசைதிருப்பும் திட்டம், இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு-05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**இல. 11, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-5.**

# நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | ஓயமடுவ நீர் வழங்கல் திட்டம் - வண. சோபித தேரோ கிராமத்திற்கு நீர் வழங்கல் வசதிகளை அமுலாக்குதல் ஒப்பந்த இல: **RC/NC/DPC/ IMP/VEN.SOBITHA/2022/003** | 12,500/- + VAT ** | ரூபா 500,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 40.6 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 07/04/2022 மு.ப. 10.00 |
| 02 | கோனகொல்ல நீர் வழங்கல் திட்டத்தின் லத்துகலவிற்கு $100m^3$ கொள்ளளவு தரைக்கீழ் நீர்த் தடாகம் மற்றும் பம்பி இல்லத்தை நிர்மாணித்தல் (சிவில் மற்றும் M&E வேலைகள்) ஒப்பந்த இல: **NWSDB/RSC(E)/CP/A3-41/GOSL/2021/77** | 20,000/- + VAT ** | ரூபா 643,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 64.29 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 06/04/2022 மு.ப. 10.00 |
| 03 | பாரிய கொழும்பு நீர் மீட்புப் பிரிவு - ஏக்கல - கழிவுநீர் அப்புறப்படுத்துதல் வலையமைப்பிலுள்ள வால்வு அறைகள் மற்றும் மேன் ஹோல்களை உயர்த்துதல் (கட்டிடம் மற்றும் சிறிய சிவில் வேலை ஒப்பந்தங்கள்) ஒப்பந்த இல:**NWSDB/GCWR/CP/A8-09/GOSL/2022/01** | 4,000/- + VAT | ரூபா 29,800/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு | 1.98 மில்லியன் | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை. Tele: 011 2623681 Fax:011 2636205 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை **"Tender Fees-DGM Tender Board"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 06/04/2022 மு.ப. 10.00 |
| 04 | மட்டக்களப்பு பிராந்தியம் - மட்டக்களப்பு நிர்மாண அலுவலகத்தின் புதுப்பித்தல் வேலைகள் ஒப்பந்த இல: **RSC(E)/DGM/RH/RENOVATION-CONS. OFFICE/ BATTI/2022/007** | 12,500/- + VAT ** | ரூபா 205,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 13.52 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, மட்டிக்களி, திருகோணமலை. Tele: 026-2222519 Fax: 026-2225225 | 30/03/2022 மு.ப. 10.00 |
| 2022-03-09ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. அக்கரைப்பற்று பிராந்தியத்திலுள்ள அக்கரைப்பற்று நீர் வழங்கல் முறைமையின் பிராந்திய களஞ்சியசாலை ஒலுவில் மற்றும் BPS என்பவற்றின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகள் (கட்டிடம் மற்றும் சிவில் வேலைகள்) ஒப்பந்த இல : **RSC (E)/AGM(ES)/C/RENO-WORKSH/RH/AKP/ 2021/86** மற்றும் அம்பாறையிலுள்ள கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள துணை சிவில் வேலைகள் மற்றும் பம்பி இல்லத்தை விஸ்தரித்தல் ஒப்பந்த இல : **NWSDB/RSC(E)/ CP/A3-66/GOSL/2021/37 -** இந்தக் கேள்விகளின் முடிவுறுத்தல் திகதி 2022-03-24ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 05 | ஹிக்கடுவ PS1&PS2 பம்பி இல்லங்களுக்கு சாக்கடை பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/S/SEWERAGEPUMPS/ HIKKADUWAPS1 & PS2/RH/2021- 37(R)** | 12,500/- +VAT ** | ரூபா 150,000/- | Electrical driven submersible sewerage பம்பித் தொகுதி உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 11.12 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 06/04/2022 பி.ப. 2.00 |
| 06 | பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு துருப்பிடிக்காத உருக்குக் குழாய்கள், அலுமினியம் செக்கர் பிளேட்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **RPC/WP/G/BIY/M&E/O&M/2020/42R-1** | 4,000/- + VAT | ரூபா 24,000/- | தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து | 2.4 மில்லியன் | பிஒநி, (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532 Fax:0112549199 | 06/04/2022 பி.ப. 2.00 |
| 07 | அம்பத்தலை நீர் சுத்திகரிப்புத் தொகுதியிலுள்ள பம்பிகளுக்கு பெயாரிங்குகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **RPC/WP/G/AMB/M&E/O&M/2022/09** | 4,000/- + VAT | ரூபா 22,000/- | தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து | 2.2 மில்லியன் | பிஒநி, (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532 Fax:0112549199 | 06/04/2022 பி.ப. 2.00 |
| 08 | ஏக்கல மற்றும் தெஹிவளை / கல்கிஸ்ஸ கழிவுநீர் சுத்திகரிப்புத் பொறித்தொகுதிக்கு Spectrophotometers வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **GCWR/SUPPLY/ SPECTROPHOTOMETER/ EKALA DEHIWALA MT.LAVINIA WWTP/2022/02** | 6,000/- + VAT | ரூபா 45,000/- | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்களின் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6 மில்லியன் | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை. Tele: 011 2623681 Fax:011 2636205 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை **"Tender Fees-DGM Tender Board"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 06/04/2022 மு.ப. 10.00 |
| 09 | மஹரகம பிராந்திய முகாமையாளருக்கு Stainless Steel Repair Clamps வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **WC/SS/M(MHG)/R. CLAMP/2022/21-O&M** | 6,000/- + VAT ** | ரூபா 60,000/- | Stainless Steel Repair Clamps உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட. Tele:/Fax: 011- 2856421/ 0112856420 - 2 | 30/03/2022 மு.ப. 10.00 |
| 10 | KNPIWSP திட்டத்தின் கீழுள்ள சியபத்கம கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கு நீர் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **KNPIWSP/S&I/PC-01/2021-34R** | 12,500/- +VAT ** | ரூபா 250,000/- | அங்கீகரிக்கப்பட்ட பம்பி உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் அல்லது CIDA பதிவைப் பெற்ற M&E ஒப்பந்தக்காரர்கள் | - | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட. Tel : 081-2492390 Fax : 081-2492286 | 20/04/2022 பி.ப. 2.00 |
